6.07.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தோட்டப் பயிர் மானிய உதவி சிறப்பு முகாம்**

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தோட்டப் பயிர் சாகுபடி மானிய உதவிக்கு விண்ணப்பங்கள் பெறும் முகாம், அறிவிக்கப்பட்ட தேதியை விடுத்து முன்கூடியே நடத்தப்பட்டதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்தனர்.

தேனி மாவட்டத்தில் தோட்டக் கலைத் துறை மூலம் தேசிய தோட்டக் கலை இயக்கம், சொட்டுநீர் பாசனம், மானாவாரி தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் தேசிய மூலிகைப் பயிர் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கீழ் தோட்டப் பயிர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் அரசு மானிய உதவி பெறுவதற்கு அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஜூலை 5ஆம் தேதி விண்ணப்பங்கள் பெறுவதற்கு சிறப்பு முகாம் நடைபெறும் என்று மாவட்ட தோட்டக் கலைத் துறை சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அறிவிக்கப்பட்ட தேதியை விடுத்து முன்கூட்டியே வெள்ளிக்கிழமை(ஜூலை 3) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில், தோட்டப் பயிர் சாகுபடி விவசாயிகளிடமிருந்து மானிய உதவிகளுக்கான விண்ணப்பங்கள் பெறும் சிறப்பு முகாம் நடைபெற்றது. மாற்று அறிவிப்பு ஏதுமின்றி, தோட்டக் கலைத் துறையில் அரசு மானிய உதவி பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்திருந்த விவசாயிகளைக் கொண்டு இம்முகாம் நடைபெற்றதால், முகாமில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாத விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் சின்னராஜிடம் கேட்டதற்கு, தோட்டக் கலைத் துறை திட்டங்களின் கீழ் மானிய உதவி பெறுவதற்கு விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெற முகாம் நடத்தி, ஜூலை 5-ம் தேதிக்குள் அறிக்கை அனுப்ப அரசு உத்தரவிட்டிருந்து. ஜூலை 5ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை என்பதை அறியாமல் அன்றைய தினம் முகாம் நடைபெறுவதாக அறிவிப்பு வெளியிடப்பட்டு விட்டது. ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற முகாமில் மொத்தம் 104 விவசாயிகள் மானிய உதவி கோரி மனு அளித்துள்ளனர் என்றார்.

**வெங்காயம், தக்காளி விலை உயர்வு**

சென்னையில் உள்ள சில்லறை விற்பனைக் கடைகளில் வெங்காயம், தக்காளி ஆகிய காய்கறிகளின் விலை 25 சதவீதம் வரை அதிகரித்துள்ளது.

சென்னை கோயம்பேடு சந்தையில் கடந்த வாரம் ஒரு கிலோ தக்காளி மொத்த விலையில் ரூ.20-க்கும், பெரிய வெங்காயம் ரூ.24-க்கும் விற்கப்பட்டன.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை இவற்றின் விலை திடீரென உயர்ந்தது. பெரிய வெங்காயம், தக்காளி ஆகியவை கிலோ ரூ.28 முதல் ரூ.32 வரையிலும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.60-க்கும் விற்கப்பட்டன.

மொத்த விலையில் ஏற்பட்ட இந்த மாற்றம் சில்லறை விலையில் வெகுவாக எதிரொலித்தது. சில்லறை விலையில் பெரிய வெங்காயம் ரூ.50-க்கும், தக்காளி ரூ.45-க்கும் விற்கப்பட்டன.

இது குறித்து கோயம்பேடு சந்தை வியாபாரிகள் சங்க ஆலோசகர் சௌந்தரராஜன் கூறுகையில், தற்போது தமிழகம், மகாராஷ்டிரம், ஆந்திரம் உள்பட நாட்டின் பல்வேறு மாநிலங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால் கோயம்பேடு சந்தைக்கு கொண்டுவரப்படும்

காய்கறிகள் வழக்கத்தைக் காட்டிலும் 30 சதவீதம் குறைந்துள்ளது. இதனால் விலை 25 சதவீதம் வரை அதிகரித்துள்ளது என்றார். இருப்பினும் உருளைக்கிழங்கு, முருங்கைக்காய், பீன்ஸ், அவரைக்காய் ஆகிய காய்கறிகள் கடந்த வார விலையிலேயே நீடிக்கின்றன.

## வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம்: பாமக செயற்குழுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக தமிழக அரசு ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கி, பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண் டும் என்று பாமக தலைமை சிறப்பு செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு கட்சியின் தலைவர் ஜி.கே.மணி தலைமை வகித்தார். இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ் வரவேற்றார். கட்சியின் நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை உடனடியாக மத்திய அரசு வெளியிட வேண்டும். தமிழக சட்டப்பேரவையை கூட்டி மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும், தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியை மாற்ற வேண்டும், நிலம் கையகப்படுத்தும் சட்டத்திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும், ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் மேல்முறையீடு செய்த கர்நாடக அரசுக்கு பாராட்டுவது, தமிழகத்தில் மது விலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும், தமிழக அரசு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கி, பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழக மீனவர்கள் சிங்களப் படையினரால் கைது செய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள

வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**"நெல்லுக்கு சொந்தம் கொண்டாடும் சீனாவின் முயற்சி முறியடிப்பு**

நெல் பயிர் தங்கள் நாட்டில்தான் உருவானது என்று கூறி அதற்கு காப்புரிமை பெற்று, சொந்தம் கொண்டாட சீனா மேற்கொண்ட முயற்சியை இந்திய விஞ்ஞானிகள் முறியடித்துள்ளதாக ஆராய்ச்சியாளர் நாகேந்திர குமார் தெரிவித்தார். நெல் பயிர் இந்தியாவில்தான் உருவானது என்று ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, தில்லியை தலைமையிடமாகக் கொண்ட இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின், செடிகளுக்கான உயிரி தொழில்நுட்ப தேசிய ஆராய்ச்சி மையத்தில் பணிபுரியும் தலைமை ஆராய்ச்சியாளர் நாகேந்திர குமார் சிங் கூறுகையில், ""நெல் பயிர் இந்தியாவில் உருவானது என்ற உண்மை எங்களது ஆராய்ச்சியின் மூலம் நிரூபிக்கப்பட்டது" என்று தெரிவித்தார்.

இதுதொடர்பாக சர்வதேச அறிவியல் ஆராய்ச்சி தொடர்பான கட்டுரைகளை வெளியிடும் "நேச்சர் சயின்டிஃபிக் ரிபோர்ட்ஸ்' பத்திரிகையில் ஆதாரங்களுடன் நமது விஞ்ஞானிகள் கட்டுரை எழுதியுள்ளனர்.

இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளிலும் நெல் பயிர் வளர்க்கப்பட்டது என்ற கருத்து கடந்த 20ஆம் நூற்றாண்டு வரை ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருந்தது.

இதனிடையே, அமெரிக்காவைச் சேர்ந்த அறிவியலுக்கான தேசிய கல்வியகத்தில் 2011ஆம் ஆண்டு சீனா ஒரு ஆராய்ச்சி அறிக்கையை வெளியிட்டது. அந்த அறிக்கையில் சீனாவில் நெல் தோன்றியதாக கூறப்பட்டது. மேலும் சீனாவின் யாங்ட்ப்ஸ பள்ளத்தாக்கில் சுமார் 8,200- 13,500 ஆண்டுகளுக்கு முன்பு முதல் முறையாக நெல்

பயிரிடப்பட்டது. அதுவே நெல் பயிரின் தோற்றம் என்று அந்த ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்திய விஞ்ஞானிகள் நெல் பயிர் இந்தியாவில்தான் தோன்றியது என்பதை ஆதாரப்பூர்வமாக நிரூபித்துள்ளனர் என்று நாகேந்திர குமார் சிங் தெரிவித்தார்.

**கீழ்பவானி பாசனக் கால்வாயை தூர்வார வேண்டும்**

கீழ்பவானி பாசனக் கால்வாயை விரைவில் தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வலியுறுத்தியுள்ளனர்.

ஈரோடு, திருப்பூர் ஆகிய இரு மாவட்டங்களிலும் கீழ்பவானி பாசனக் கால்வாய் மூலமாக, இரு போகமும் சேர்த்து சுமார் 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. இதில், இம்முறை முதல் போகத்திற்குத் தண்ணீர் திறந்து விடப்படும். இதில், சுமார் 1 லட்சம் ஏக்கர் நிலங்கள் பயனடையும். பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி பாசனத்துக்கு ஆண்டுதேறும் ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி தண்ணீர் திறப்பது வழக்கம். இந்நிலையில், கீழ்பவானி பாசனக் கால்வாய், துணைக் கால்வாய், இணைக் கால்வாய் என அனைத்து பாசனக் கால்வாய்களும் புதர் மண்டிக் கிடக்கின்றன. சில இடங்களில் மதகுகள் உடைந்தும், மண் அரிப்பும் ஏற்பட்டுள்ளன. பொதுப்பணித் துறை இப்போதே பாசனக் கால்வாய்களை செப்பனிடும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே விவசாயிகளின் எதிர்பார்ப்பாகும்.

இதுகுறித்து தமிழக விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் செ.நல்லசாமி கூறுகையில், "பாவனிசாகர் அணைக்கு அதன் நீர்பிடிப்புப் பகுதிகளில் இருந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், அணை விரைவில் நிரம்பி விடும். எனவே, பாசனத்திற்கு தண்ணீர் திறப்பதற்கு முன்னதாகவே பாசனக் கால்வாய்களை செப்பனிட்டு, தூர்வாரும் பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும். மேலும், அணையில்

போதிய அளவு தண்ணீர் இருப்பதால் ஆகஸ்ட் மாதம் முதல் தேதியே பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க வேண்டும்'என்றார்.

**வேளாண்மை கூட்டுறவுச் சங்கத்தில் ரூ.1.42 கோடிக்கு கொப்பரை ஏலம்**

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ. 1 கோடியே 42 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது.

பெருந்துறை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதி விவசாயிகள் 4,404 மூட்டைகளில் 2,15,000 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 65.50-க்கும், அதிகபட்சமாக ரூ. 70.25-க்கும் விற்பனையானது. இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 40.40-க்கும், அதிகபட்சமாக ரூ. 65.05-க்கும் விற்பனையானது.

மொத்தம், ரூ. 1 கோடியே 5 லட்சத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது என சங்கத் தலைவர் அருள்ஜோதி கே.செல்வராஜ் தெரிவித்தார்.

**ஈரோட்டில் தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகம் அமைக்க கோரிக்கை**

ஈரோட்டில் தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகம் அமைக்க வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இச்சங்கத்தின் மாதாந்திரக் கூட்டம் ஈரோட்டில் சனிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு, சங்க மாவட்டத் தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் டி.சுப்பு, பொருளாளர் எம்.லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: 5000 தென்னை

விவசாயிகள், ஒரு லட்சம் தென்னை மரங்கள் இருக்கும் வகையில் விவசாயிகளை ஒருங்கிணைத்து தென்னை விவசாயிகள் இணையம் அமைக்க வேண்டும். இந்த இணையம் மூலமாக "நீரா' விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈரோட்டை மையமாக வைத்து மத்திய தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகம் அமைக்க வேண்டும்.

கீழ்பவானி பாசனப் பகுதிக்கு ஆகஸ்ட் 15-ஆம் தேதி தண்ணீர் திறக்க மாவட்ட நிர்வாகம், தமிழக அரசுக்கு பரிந்துரைக்க வேண்டும். ஆவின் நிர்வாகம் பால் கொள்முதலை அதிகரிக்கவும், பால் பதன மற்றும் விற்பனை கட்டமைப்பை அதிகப்படுத்தி பால் பொருள்கள் தேக்கமடையாமல் இருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு வேளாண் கடனுக்கு உத்தேசித்துள்ள வட்டி உயர்வை ரத்து செய்வதுடன் வட்டியில்லா கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றம் உத்தரவுப்படி நீர்வள ஆதாரங்களை புல தணிக்கை செய்து ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நீலகிரியில் மிகச்சிறந்த நீர்வளப் பாதுகாப்பு கட்டமைப்பு**

நீலகிரி மாவட்டத்தில் மிகச்சிறந்த நீர்வளப் பாதுகாப்பு கட்டமைப்பு உள்ளதாக உதகையில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

இந்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு நிறுவனத்தின் உதகை மண்டல ஆராய்ச்சி மையத்தில் வேளாண் பொறியியல் மாணவ, மாணவிகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. ஒரு மாதம் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் மகராஷ்டிரம், குஜராத், ஆந்திர மாநிலங்களைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். இப்பயிற்சியின் நிறைவு விழாவும், சான்றிதழ் வழங்கும் விழாவும் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு, தலைமை வகித்த மையத் தலைவர் டாக்டர் ஓ.பி.கோலா பேசுகையில், பிற மாநில மாணவர்கள் பயிற்சிக்கு பின்பும் இம்மையத்துடன் தொடர்பில் இருக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

மையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் டாக்டர் மணிவண்ணன் பேசுகையில், மண் மற்றும் நீர் சேகரிப்பு முறைகள், ஓடை பராமரிப்பு, கட்டமைப்பு, மதிப்பீடு செய்தல், பல்வேறு வகையான உழவியல் மற்றும் பொறியியல் மண் பாதுகாப்பு முறைகள் உள்ளிட்டவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சிகளை அவரவர் மாநிலங்களில் தங்கள் களப்பணியின்போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

நீலகிரி மாவட்ட வேளாண் பொறியியல் பிரிவு கண்காணிப்பு பொறியாளர் குமார் பேசுகையில், நீலகிரி மலைப்பகுதியில் மண்ணின் தன்மை, மழையளவு போன்றவற்றால் மாவட்டத்தில் மண் அரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். நீர்வளப் பாதுகாப்பு கட்டமைப்பு குறித்து கற்றுக்கொள்ள நீலகிரி மாவட்டமே மிகச்சிறந்த பகுதி. மேலும், வெளிமாநில, மாவட்ட வேளாண், விவசாய மாணவர்கள் நீலகிரியை தங்களது பயிற்சிக் களமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

**கனரா வங்கி சார்பில் விவசாயிகளுக்கான கருத்தரங்கு**

ஸ்ரீவில்லிபுத்தூர் கனரா வங்கிக் கிளை சார்பில் பிள்ளையார்நத்தம் கிராமத்தில் விவசாயிகளுக்காக வங்கி செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது. வங்கியின் விவசாய விரிவாக்க அதிகாரி பிரேமிகா ஷாலினி வரவேற்றார். கருத்தரங்கை தொடக்கி வைத்து வங்கியின் முதன்மை மேலாளர் க.இளங்கோ கருத்துரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது: விவசாயிகளின் நலனுக்கு மத்திய மாநில அரசுகள் செயல்படுத்தி வரும் திட்டங்கள் வங்கிகள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் பயன்களை விவசாயிகள் பெற்று, கடனை உரிய தவணையில் செலுத்தி மேலும்

பயன் பெறவேண்டும் என்றார். வங்கியின் கடன் பிரிவு மேலாளர் வி.முத்துகிருஷ்ணன், அலுவலர் விஸ்வேஸ்வரன் ஆகியோர் விவசாயிகளுக்கான வங்கிக் கடன்கள் குறித்து விளக்கினர். தோட்டக்கலைத் துறை மூலம் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டம், சொட்டு நீர் பாசனத் திட்டம், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டம், மானாவாரி பகுதி மேம்பாட்டுத் திட்டம், மருத்துவ பயிர்கள் இயக்கத் திட்டம் ஆகிய திட்டங்களில் கீழ் விவசாயிகளுக்கு உள்ள மானியங்கள் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் ஆ.மாரிமுத்து விளக்கினார். மேலும் திட்டங்களின் பயன்களைப் பெற விவசாயிகள் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், அதன் வழிகாட்டு முறைகள் குறித்தும் விளக்கினார்.

விருதுநகர் தோட்டக்கலை உதவி இயக்குநர் (நடவுப்பொருள்) சமுத்திரபாண்டி பேசுகையில், ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் பூவாணி அரசு தோட்டக்கலைப் பண்ணைகளில் இருந்து தரமான பழக்கன்றுகள் மற்றும் இதர நடவுப் பொருள் கன்றுகள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படுகிறது என்றார். மேலும் உயர் தொழில் நுட்பங்களைக் கடைப்பிடிப்பதால், ஏற்படும் நன்மைகள் குறித்து அவர் விளக்கினார்.

முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கனரா வங்கியின் விவசாய விரிவாக்க அதிகாரி பிரேமிகா ஷாலினி செய்திருந்தார்.

## ஜூலை 17-இல் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் வருகிற 17-ஆம் தேதி நடைபெறுகிறது.

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாதம்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி, ஜூலை மாதத்துக்கான குறைதீர் கூட்டம் வருகிற 17-ஆம் தேதி ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10

மணிக்கு நடைபெறுகிறது. கூட்டத்துக்கு, ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசுத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள், கோரிக்கைகளுக்குப் பதில் அளிக்கின்றனர். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் தங்களது குறைகள் அடங்கிய மனுக்களை வருகிற 13-ஆம் தேதிக்குள் ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம். மேலும், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்களது மனுக்களைப் போடலாம். இந்த மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு குறைதீர் கூட்டத்தின்போது மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும்**

தேசிய, கூட்டுறவு வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் (எஸ்.ஏ.சின்னசாமி) வலியுறுத்தியுள்ளது.

தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கிருஷ்ணகிரியில் உழவர் தின விவசாயிகள் பேரணி, மாநாடு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி தலைமையில் கிருஷ்ணகிரி அண்ணா சிலை எதிரில் தொடங்கிய பேரணி, டி.பி. சாலை, காந்தி சிலை, காந்தி சாலை, வட்டச்சாலை வழியாக கார்னேசன் திடலை அடைந்தது. இந்தப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சட்டப் பேரவைத் தேர்தலின் போது தமிழக முதல்வர் அளித்த வாக்குறுதியின்படி மறைந்த நாராயணசாமி நாயுடுவுக்கு மணிமண்டபம்

கோவையில் அமைக்க வேண்டும். விவசாயிகளின் தற்கொலையைத் தடுக்கவும் விவசாயத்தைக் காக்கவும் தேசிய, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்ற கடன்களை முழுமையாகத் தள்ளுபடி செய்யவும் வேண்டும். காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்புப்படி காவிரி மேலாண்மை ஆணையமும் காவிரி கண்காணிப்புக் குழுவும் காலதாமதமின்றி அமைத்து, தமிழகத்திற்கு வழங்க வேண்டிய தண்ணீரை கர்நாடகா வழங்க, மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டிவரும் ஆந்திர மாநில அரசின் நடவடிக்கையையும், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்னையில் உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராகச் செயல்படும் கேரள மாநில அரசின் நடவடிக்கைகளை மத்திய அரசு தடுத்திடவும் வேண்டும். முல்லைப் பெரியாறு, தேக்கடி அணைகளுக்கு மத்திய காவல் படை பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

தென்பெண்ணை - பாலாறு இணைப்புத் திட்டத்தை பழைய வழித்தடத்தில் நிறைவேற்ற வேண்டும். தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் முதல் கட்டமாக தென்னக நதிகள் இணைப்புக்கான பணியைத் தொடங்க வேண்டும். விவசாயத்துக்குத் தனி நிதிநிலை அறிக்கை தயாரிக்க வேண்டும். கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரியில் சிப்காட் தொழிற்பேட்டைக்கு பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவு விளை நிலங்களைக் கையகப்படுத்தும் நடவடிக்கையைக் கைவிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் சட்ட பேரவைக் கூட்டத்தொடரின் போது கோட்டை முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது, மாவட்டத் தலைநகரங்களில் மத்திய அரசு அலுவலகங்கள் முன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பன உள்ளிட்ட மொத்தம் 33 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநில பொதுச் செயலர் சுந்தரம், துணை பொதுச் செயலர் ராஜசிதம்பரம், பொருளாளர் வேல்மணி, பிரசாரக் குழுச் செயலர் உழவன்பாரதி, மாநில துணைத் தலைவர்கள் பாண்டியன், ஆறுமுகம், செயலர் லட்சுமணபெருமாள், மாவட்டத் தலைவர்கள் பி.ஸ்ரீராம்ரெட்டி, பி.ஆர்.செங்கோடன், செயலர்கள் எ.சென்னையநாயுடு, கே.சக்திவேல், பொருளர்கள் பழனி, ஆர்.முனிரத்தினம், முன்னாள் மாவட்டச் செயலர் கே.வி.சின்னசாமி, டிராக்டர் விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.எஸ்.மகாராஜன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

**தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளிடம் விண்ணப்பம் பெற முகாம்**

மத்தூரில் தோட்டக்கலைத் துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மானியத்துடன் பெறுவதற்காக விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

மத்தூர் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் ஜி.சீனிவாசன் தலைமை வகித்தார். துணை தோட்டக்கலை அலுவலர் வி.சீனிவாசன் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர்கள் சி.கோவிந்தன், ஏ.ராஜேந்திரன், சி.முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தோட்டக்கலைத்துறை மூலம் 2015-16-ம் ஆண்டுக்கான திட்டங்களில் விவசாயிகள் பயன்பெற திசு வாழை பரப்பு விரிவாக்கம், பப்பாளி, மா-அல்ட்ரா அடர்வு நடவு விரிவாக்கம், கொய்யா சாகுபடி, உயர்ரக காய்கறிகள் பரப்பு விரிவாக்கம், மிளகாய், பூண்டு, கொத்தமல்லி, மா பழைய தோட்டத்தை புதுப்பித்தல், குழாய் வடிவபசுமை இல்லம் அமைத்தல், நிழல் வலைக்கூடாரம், தேனீ வளர்ப்பு, தேன் எடுக்கும் கருவி பெறுதல், விவசாயத்திற்கு மானிய விலையில் டிராக்டர், பவர் டில்லர் பெறுதல் ஆகியவை குறித்து உதவி இயக்குநர் ஜி.சீனிவாசன் விளக்கம் அளித்தார். இந்த சிறப்பு முகாமில் 120 விவசாயிகள் பங்கேற்று 75 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் சி.சக்திவேல், நிலவள வங்கி இயக்குநர் குழந்தைவேலு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**மேட்டூர் அணைக்கு 5 ஆயிரம் கன அடி நீர்வரத்து**

கர்நாடக அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீரின் அளவு குறைந்ததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5 ஆயிரம் கன அடியாகக் குறைந்தது. கர்நாடக மாநிலத்தில் பருவமழை பெய்து வருவதன் காரணமாக, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வந்தது. தற்போது, காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழையின் அளவு குறைந்துள்ளது. இதனால், கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்படும் உபரி நீரின் அளவும் குறைக்கப்பட்டுள்ளது. இதைத்தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5,404 கன அடியாகக் குறைந்தது.

இதையடுத்து, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 83.62 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 1000 கன அடி நீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 45.66 டி.எம்.சி.யாக இருந்தது

**குலைநோயைக் கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு யோசனை**

அரியலூர் மாவட்டம், தா.பழூர் ஒன்றியத்தில் நவரை நெற்பயிரில் குலைநோய்த் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜா ஜோஸ்லின் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தா. பழூர் ஒன்றியத்தில் தற்போது பயிரிடப்பட்டு வரும் குறுவை மற்றும் நவரை நெற்பயிரில் குலை நோய் தாக்குதல் ஏற்பட்டு வருகிறது. இதை தடுக்காவிட்டால் அதிக மகசூல் இழப்பு ஏற்படும். அதிகமாக தளைச்சத்து

இடுதல், மேகமூட்டம், அதிகமான ஈரப்பதம், பனி ஆகியவை குலைநோய் பரவ காரணமாகும்.

இந்நோயின் ஆரம்ப நிலையில் பச்சை நிறத்தில் புள்ளிகள் தோன்றி, பின்பு பழுப்பு நிறம் கொண்ட பெரிய புள்ளிகளாக மாறும். நோய் முற்றிய நிலையில், இதே மாதிரியான புள்ளிகள் இலை உறையின் மீதும் தோன்றும். நோயால் பாதிக்கப்பட்ட கதிரின் கழுத்துப் பகுதி உடைந்து விடும். இதுவே குலைநோயின் அறிகுறிகளாகும். இந்நோயை கட்டுப்படுத்த 30 நாட்கள் கழித்து ஒரு ஏக்கருக்கு ஒரு கிலோ சூடோமோனாஸ் கலவையை 20 கிலோ சாண எருவுடன் கலந்து இட வேண்டும்.

ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்வதன் மூலம் நாற்றங்காலில் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

வளர்ந்த பயிர்களில் கட்டுப்படுத்த கார்பன்டசிம் 50 டபிள்யு 200 கிராம் மற்றும் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து இடுவதன் மூலம் குலை நோயை கட்டுப்படுத்தி மகசூல் இழப்பை விவசாயிகள் தடுக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வாழ்வாதாரப் பிரச்னைகளுக்கு விவசாயிகள் ஒருங்கிணைய வேண்டும்'

வாழ்வாதாரப் பிரச்னைகளுக்காக விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார் சிவகங்கை நகர் மன்றத் தலைவரும், காவிரி, வைகை குண்டாறு கூட்டமைப்பின் பொதுச் செயலருமான எம். அர்ச்சுணன்.

புதுக்கோட்டையில் மாநிலத் தலைவர் மிசா. மாரிமுத்து தலைமையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வீரவணக்க நாள் பொது மாநாட்டில் பங்கேற்று அவர் மேலும் பேசியது:

தமிழகத்தில் விவசாயிகளின் உரிமைகளைப் பாதுகாக்க பாடுபட்ட தலைவர்கள் ஏராளம். அதில், விவசாயிகளை ஓரணியில் திரட்டி போராட்டக்களம் கண்டு எழுச்சியை உருவாக்கியவர் சி. நாராயணசாமிநாயுடு, இயற்கையைப் பாதுகாப்பதன் மூலமே விவசாயத்தையும் பாதுகாக்க முடியும் என்று தனது வாழ்நாளை அர்ப்பணித்து அரும்பாடுபட்டவர் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார், புதுக்கோட்டையைச் சேர்ந்த க. முத்துச்சாமிவல்லத்தரசு விடுதலைப் போராட்ட வீரராகவும், புதுகை சமஸ்தானத்தை இந்தியாவுடன் இணைத்திட நடைபெற்ற போராட்டத்தை முன்னின்று நடத்தியவர். நாடு விடுதலை பெற்றபின் 1952-ல் நடந்த முதல் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு புதுகை மக்களவைத் தொகுதி உறுப்பினராகத் தேர்வு செய்யப்பட்டார். காவிரியில் வீணாகும் உபரி நீரைக் கொண்டு புதுக்கோட்டை, ராமநாதபுரம் மக்களின் வறட்சியைப் போக்க வேண்டுமென நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தவர். இந்த முப்பெரும் தலைவர்களின் நினைவைப் போற்றிடவும் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளை விவசாயிகள் நிறைவேற்ற வேண்டும். வாழ்வாதாரப் பிரச்னைகளுக்காக விவசாயிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கம் என்றார்.

இதில் இந்திய விவசாயிகள் சங்கத் தலைவர் ஜி.எஸ். தனபதி, கூட்டமைப்பு நிர்வாகி எஸ். ஆரோக்கியசாமி, விவசாயிகள் சங்க பிரதிநிதிகள் ஆர். கோவிந்தராஜ், பி. சைவராஜ், நடராஜன் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக பல்வேறு போராட்டங்களில் உயிர் நீத்த 43 விவசாயிகளுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது.

**தோட்டக்கலை மானியம் பெற 165 விவசாயிகள் பெயர் பதிவு**

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் அண்மையில் நடைபெற்ற முகாமில் தேசிய தோட்டக்கலை மானியம் பெற 165 விவசாயிகள் தங்களது பெயரை பதிவு செய்துள்ளனர்.

வேப்பந்தட்டையில் தோட்டக்கலைத்துறையின் கிளை அலுவலகம் செயல்படுகிறது. இதில், மா நடவு, காய்கறிகள் சாகுபடி, சின்ன வெங்காயம், மற்றும் மிளகாய் சாகுபடி செய்ய விருப்பமுள்ள விவசாயிகள் தோட்டக்கலை துறையினரின் பல்வேறு திட்டத்தின் கீழ் மான்யம் பெற விண்ணப்பித்தனர்.

மேலும், பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்தின் கீழ் பாலித்தீன் பசுமை குடில், நிழல் வலை மற்றும் நெகிழி மூடாக்கு அமைக்கவும், தேனீக்கள் வளர்க்கவும் விண்ணப்பம் பெறபட்டது. முகாமில் பங்கேற்று விண்ணப்பித்த விவசாயிகளிடம் நிலத்துக்கான கணிணி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், நில வரைபடம் மற்றும் 3 பாஸ்போட் அளவு புகைப்படம் ஆகியவை பெறப்பட்டது. இம்முகாமில், 165-க்கும் மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்தனர்.

பெறப்பட்ட விண்ணப்பங்களை தோட்டக்கலை துணை இயக்குநர் (தொழில் நுட்பம்) விஜய காண்டீபன், வேப்பந்தட்டை தோட்டக்கலைத்துறை அலுவலர் ஆனந்தன், வேளாண்மை அலுவலர்கள் வீராசாமி, மூர்த்தி, சந்திரசேகர் ஆகியோர் சரிபார்த்தனர்.

**பேய்க்குளம் பாசனக் கால்வாயில் தூர்வாரும் பணி தொடக்கம்**

தூத்துக்குடி ஸ்டெர்லைட் நிறுவனம் சார்பில் பேய்க்குளம் விவசாய பாசனக் கால்வாயில் தூர்வாருதல், சுத்தம் செய்யும் பணி தொடங்கியது. தூத்துக்குடி ஸ்டெர்லைட் காப்பர் நிறுவனம் சார்பில் ஸ்ரீவைகுண்டம் அணையின் வடக்கு பிரதானக் கால்வாயில் உள்ள பேய்க்குளம் விவசாய பாசனக் கால்வாயில் தூர்வாருதலும், சுத்தப்படுத்தும் பணியும் வெள்ளிக்கிழமை தொடங்கியது. இதையொட்டி, தூத்துக்குடியை அடுத்த செபத்தையாபுரம் அருகேயுள்ள திருப்பணிச்செட்டிக்குளம் காத்தாடி மடை 1இல் நடைபெற்ற சிறப்பு பூஜை, கால்வாய் தூர்வாரும் பணியை ஸ்டெர்லைட் காப்பர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தலைவர் குமாரவேந்தன், தாமிரவருணி திட்டக்குழுத் தலைவர் உதயசூரியன் ஆகியோர்

தொடங்கிவைத்தனர். திருப்பணிச்செட்டிக்குளம் காத்தாடி 1 ஆவது மடையில் இருந்து 11 ஆவது மடை வரையிலான 6 கி.மீ. தொலைவுக்கு கால்வாய் தூர்வாருதல், சுத்தம் செய்யும் பணி நடைபெற உள்ளதாகவும், இதன் மூலம் 6 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலமும், 25 ஆயிரம் விவசாயிகளும் பயன்பெறுவர் என்றும் குமாரவேந்தன் தெரிவித்தார். நிகழ்ச்சியில், ஸ்டெர்லைட் காப்பர் தலைமை மருத்துவ அலுவலர், சமுதாய வளர்ச்சிப் பிரிவுத் தலைவர் கைலாசம், மக்கள் தொடர்பு அலுவலர் இசக்கியப்பன், பேய்க்குளம் விவசாயிகள் அபிவிருத்தி சங்கத் தலைவர் குணசேகரன், செயலர் முருகேசன், பொருளாளர் குணசேகரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம்**

தமிழக அரசு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கி, பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று பாமக தலைமை சிறப்பு செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இக்கூட்டத்துக்கு கட்சியின் தலைவர் ஜி.கே.மணி தலைமை வகித்தார். இளைஞரணித் தலைவர் அன்புமணி ராமதாஸ், மாநிலப் பொருளர் அக்பர்அலிசையத், வன்னியர் சங்க மாநிலத் தலைவர் ஜெ.குரு, முன்னாள் மத்திய அமைச்சர் ஏ.கே.மூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுச்செயலாளர் வடிவேல் இராவணன் வரவேற்றார். கட்சியின் நிறுவனர் மருத்துவர் எஸ்.ராமதாஸ் சிறப்புரையாற்றினார்.

கூட்டத்தில் சாதி வாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு விவரங்களை உடனடியாக மத்திய அரசு வெளியிட வேண்டும். மத்திய, மாநில

அரசுகள் பொருளாதார வளர்ச்சிக்கான கொள்கைகளை கடைப்பிடிக்க வேண்டும்,

தமிழக சட்டப்பேரவையை கூட்டி மானியக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும், தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியை மாற்ற வேண்டும், நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப்பெற வேண்டும்,

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் மேல்முறையீடு செய்த கர்நாடக அரசுக்கு பாராட்டுவது, தமிழ்நாட்டில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்த வேண்டும்,

தமிழகத்தின் ஒப்புதல் இல்லாவிட்டால் மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கு அனுமதி வழங்க மாட்டோம் என்று அன்புமணி ராமதாஸிடம் கூறிய மத்திய அமைச்சர் உமாபாரதியை பாராட்டுவது, தமிழக அரசு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ஏக்கருக்கு ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கி, பயிர்க் கடனை தள்ளுபடி செய்ய வேண்டும். தமிழக மீனவர்கள் சிங்களப் படையினரால் கைது செய்யப்படுவதையும், தாக்கப்படுவதையும் நிரந்தரமாகத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் பாமக முன்னாள் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மற்றும் இந்நாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், மாநில செயற்குழு உறுப்பினர்கள், வன்னியர் சங்கத்தின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

**அரசு மானியங்கள் பெற ஆதார் கட்டாயம் விவசாயிகளுக்கு வேளாண் துறை உத்தரவு**

மாநிலம் முழுவதும், ஒரு கோடிக்கும் மேலான விவசாயிகள் உள்ளனர். இதில், 81 லட்சம் பேருக்கு, ஒருங்கிணைந்த விவசாய கையேடு வழங்க திட்டமிட்டு, 65 லட்சம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கையேடு பெற்ற விவசாயிகள் மூலம் உணவு தானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பயறு வகைகள், காய்கறிகள், பழங்கள் மற்றும் வாசனை பொருட்கள் உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமை புரட்சியை ஏற்படுத்த தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக, ஆண்டுதோறும் உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில் விதைகள், உரங்கள், நுாண்ணுாட்ட சத்துக்கள் உள்ளிட்ட இடுபொருட்கள்; வேளாண் கருவிகளும், இயந்திரங்களும் மானிய விலையில்

வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான நிதியை, மாநில அரசு மட்டுமின்றி மத்திய அரசும் வழங்குகிறது.இந்த நிலையில், மானிய திட்டங்களில் பலன் பெற விரும்பும் விவசாயிகள், தங்களுடைய ஆதார் அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டை எண்ணை, அந்தந்த மாவட்டங்களில் உள்ள உதவி வேளாண் அலுவலர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும் என, வேளாண் துறை உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், விவசாயிகளிடமும் நேரடியாக அறிவுறுத்தப்படுவதோடு, குறுஞ்செய்திகளையும் அனுப்பி வருகிறது. - நமது நிருபர் -

**பெரியாறு அணைக்கு வரும் நீர்பாசனத்திற்கு திருப்ப ஏற்பாடு**

முல்லைப் பெரியாறு அணை மூலம் தேனி, மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம், திண்டுக்கல் என, ஐந்து மாவட்டங்களில், 2.08 லட்சம் ஏக்கர் நிலங்கள், பாசன வசதி பெறுகின்றன. கம்பம், அல்லிநகரம், கூடலுார் நகராட்சிகள், மதுரை மாநகராட்சி உள்ளிட்ட பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் குடிநீர் தேவையும் பூர்த்தியாகிறது. இந்த அணை, 10.5 டி.எம்.சி., கொள்ளளவு உடையது. தென்மேற்கு பருவமழையால் அணைக்கு, வினாடிக்கு, 800 கன அடி வரை நீர்வரத்து உள்ளது. தற்போது அணையில், நான்கு டி.எம்.சி., அளவிற்கு தண்ணீர் இருப்பு உள்ளது. ஐந்து மாவட்டங்களின் பாசனத்திற்காக, அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. வரும் நாட்களில், பாசன தேவை அதிகரிக்கும் என்பதால், அணைக்கு வரும் நீரை முழுமையாக, பாசன தேவைக்கு திருப்பும் படியும், பாசன தேவை பூர்த்தியான பின், தேக்கி வைக்க நடவடிக்கை எடுக்கலாம் எனவும், மதுரை மண்டல நீர்வளத் துறை அதிகாரிகளுக்கு, பொதுப்பணித் துறை உத்தரவிட்டுள்ளது.

**கி.கிரியில் தென்மேற்கு பருவமழை தாமதம்:300 ஹெக்டேரில் அவரை சாகுபடிக்கு சிக்கல்**

ஓசூர்:ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், நடப்பாண்டு தென்மேற்கு பருவ மழை ஏமாற்றி வருவதால், வரும், ஆகஸ்டில், 300 ஏக்கர் பரப்பளவில் அவரை சாகுபடி நடக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நல்ல தட்பவெப்ப நிலை மற்றும் மண் வளம் கொண்ட ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், விவசாய பணிகள் அதிகளவு நடக்கிறது. குறிப்பாக, கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 5,000 ஹெக்டேர் பரப்பளவிலும் காய்கறிகளும், ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், 400 ஹெக்டேர் பரப்பளவிலும்

ரோஜா மலர்களும் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்யப்படுகிறது. மேலும், 500 ஹெக்டேர் பரப்பளவில் அவரையும், இதர பயிர்களான வாழை, சோளம், உளுந்து, துவரை போன்றவற்றின் சாகுபடியும் நடக்கிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகா பகுதிகளில், நிலத்தில் போர் போட்டு சொட்டு நீர் பாசனம் மூலமும், கெலவரப்பள்ளி அணை, ஏரி, குளங்கள் மூலமும் பாசனம் நடக்கிறது. கிணற்று பாசனமும் ஒருபுறம் நடந்து வருகிறது.

ஓசூர் தாலுகாவில் ஆண்டு முழுவதும் பிரதான நீர் ஆதாரம் இல்லாததால், ஒவ்வொரு ஆண்டும் பெய்யும் பருவ மழைகள், கோடை மழைகளை நம்பி தான் விவசாய சாகுபடி நடக்கிறது. தென்பெண்ணை ஆறு, ஓசூர் வழியாக பாய்ந்தோடினாலும், அவற்றின் மூலம் பாகலூர், தொரப்பள்ளி அக்ரஹாரம், சூளகிரி உள்ளிட்ட ஒரு சில பகுதிகள் மட்டுமே பாசன வசதி பெறுகிறது. இதர பகுதி விவசாய நிலங்களில், நிலத்தடி நீர் மட்டத்தை நம்பியே சாகுபடி பணி நடக்கிறது. ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை, ஜூன் மாதம் துவங்கி செப்டம்பர் வரை பெய்யும். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை இதுவரை பெய்ய துவங்காமல், ஏமாற்றி வருகிறது.

இதனால், விவசாயிகள் அவரை சாகுபடி பணியை துவங்காமல், தென்மேற்கு பருவமழையை எதிர்பார்த்து காத்துள்ளனர். அதனால், நடப்பாண்டு அவரை சாகுபடி பரப்பளவு குறையும் அபாயம் உள்ளது.

இது குறித்து வேளாண்மை அதிகாரி ஒருவர் கூறியதாவது:ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், ஆண்டுதோறும், 982 மி.மீ., முதல், 1,200 மி.மீ., வரை தென்மேற்கு பருவமழை பெய்ய வேண்டும். ஆனால், கடந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்து போனது.

இந்த ஆண்டும் தென்மேற்கு பருவமழை காலம் தாழ்த்தி வருகிறது. ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், 500 ஹெக்டேர் பரப்பளவில் அவரை சாகுபடி செய்யப்படும். இதில், 200 ஹெக்டேர் பரப்பளவில் ஆண்டு முழுவதும் சாகுபடி இருக்கும். ஜூன் மாதம் பெய்யும் தென்மேற்கு பருவமழையை நம்பி, 300 ஏக்கர் பரப்பளவில் அவரை சாகுபடி செய்யப்படும். கடந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால், 300 ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட வேண்டிய அவரை, 250 ஏக்கரில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. இந்த ஆண்டும் தென்மேற்கு பருவமழை காலம் தாழ்த்தி வருவதால், ஆகஸ்ட் மாதம், அவரை சாகுபடி எதிர்பார்த்த படி நடக்குமா என்ற சந்தேகமாக உள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.

**எளிய முறையில் அதிக செலவின்றி மாடி தோட்டம்**




மதுரை:தினமலர் சார்பில் மதுரை வாப்ஸ் தொண்டு நிறுவனத்தில் பெண்களுக்கான மாடி தோட்டம் அமைப்பது குறித்து இலவச பயிற்சி அளிக்கப்பட்டது.வாப்ஸ் நிறுவன சி.ஓ.ஓ. சோமேஷ்பாபு, தொழில்நுட்ப ஆலோசகர் சுப்ரமணியன் பங்கேற்றனர்.காய்கறி தோட்டம் அமைப்பது குறித்து பயிற்றுனர் நடராஜன் கூறியதாவது: கத்தரி, தக்காளி, பச்சைமிளகாய் விதைகள் சிறிதாக இருப்பதால் அவற்றை குழித்தட்டு

டிரேயில் வளர்க்க வேண்டும். குழிகளில் தேங்காய்நார் துகள்களை சேர்த்து தண்ணீர் ஊற்றி லேசாக விரலால் அழுத்திய இடத்தில் விதைகளை துாவி மேலாக தேங்காய் நார் துகள்களால் மூட வேண்டும். இப்படி 30 நாட்கள் டிரேயில் நாற்றுகளாக வளர்த்து, பெரிய பைகளுக்கு மாற்ற வேண்டும். மற்ற விதைகளை மண் பைகளில் நேரடியாக துாவி செடியாக வளர்க்கலாம். வசதியிருந்தால் பசுமை குடில் அமைக்கலாம். நஞ்சில்லா உணவுகளை வீட்டில் உற்பத்தி செய்யலாம் என்றார்.சொட்டுநீர் பாசன பயிற்றுனர் செந்தில்குமார் கூறியதாவது: காய்கறி செடிகள் அதிகபட்சம் ஆறு மாதங்கள் வரை பலன் கொடுக்கும். அதன்பின் பைகளில் உள்ள மண்ணை மாற்றி வேறு விதைகளை நடவேண்டும். மாடியில் பைகள் வைக்கும் போது துளைகளின் வழியே தண்ணீர் வெளியேறும் போது மாடியில் தேங்கக்கூடாது. சட்டமிடப்பட்ட மரப்பலகைகளில் பைகளை வைத்தால் தண்ணீர் தேங்காமல் வெளியேறி விடும். மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பைகளை இடம் மாற்றி வைக்க வேண்டும். மண்ணை அதிகப்படுத்தினால் எடை கூடும். மூன்றில் ஒரு பங்கு மண்ணாகவும், மீதி இரண்டு பங்கு தேங்காய் நார் துகள்களையும் பயன்படுத்துவது நல்லது.சற்றே பெரிய டிரம்களில் மா, கொய்யா, மாதுளை, பப்பாளி, எலுமிச்சை, முருங்கை மரங்களை நடலாம். இலைகளை மட்டுமே பயன்படுத்துவதாக இருந்தால் முருங்கை மரத்தை சிறிய பைகளில் கூட வளர்க்கலாம். தண்ணீர் இருந்தால் ஆண்டு முழுவதும் காய்கறி பயிர்களில் லாபம் பார்க்கலாம். கத்தரி, வெண்டை, தக்காளி, செடி அவரை, பீட்ரூட், முள்ளங்கி செடிகளை மாடியில் வளர்க்கலாம், என்றார்.

**தோட்டக்கலை துறை விழிப்புணர்வு முகாம்**

வாலாஜாபாத்: வாலாஜாபாத் வட்டார தோட்டக்கலை துறை சார்பில், திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் நடந்தது.

வாலாஜாபாத் வட்ட வேளாண் விரிவாக்க மைய கூட்ட அரங்கில் நடந்த முகாமிற்கு, தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் அனிலாகிங்ஸ்லி தலைமை தாங்கினார். அவர், தோட்டக்கலை துறையில் செயல்படுத்தும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் குறித்து விளக்கினார்.

குறிப்பாக, சொட்டு நீர்ப்பாசனம்; நிழல் வலை குடில் மற்றும் பசுமை குடில்; மண்புழு உரம் தயாரித்தல் ஆகியவற்றிற்கு வழங்கும் மானியம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். இந்த முகாமில், வாலாஜாபாத் வட்டாரத்தைச் சேர்ந்த, 74 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

மானிய திட்டங்கள் பெற, 59 விவசாயிகள் விண்ணப்பித்து உள்ளனர்.

**விவசாயிகளுக்கு ஒருநாள் பயிற்சி**

திருத்தணி: தோட்டக்கலை துறை சார்பில், பயிர் சாகுபடி திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு, ஒருநாள் பயிற்சி நேற்று அளிக்கப்பட்டது.

திருத்தணி தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில், விவசாயிகள் விழிப்புணர்வு மேளா என்ற பயிற்சி, வி.கே.என்.கண்டிகையில் நேற்று நடந்தது.ஊராட்சி தலைவர் சந்திரய்யா, தலைமை வகித்தார். இதில், நவீன முறையில் தோட்டக்கலை பயிர் சாகுபடி மற்றும் திட்டங்கள் குறித்து, தோட்டக்கலை உதவி இயக்குனர் சித்தகங்கய்யாவும்; விவசாயிகளுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் திட்டங்கள் குறித்து வேளாண் பொறியியல் துறை அலுவலர் வெங்கடேசனும்; காய்கனி வகைகளுக்கு மானிய விலை மற்றும் இலவசமாக வழங்கப்படும் விதைகள் குறித்து, வேளாண்மை விற்பனை துறை அலுவலர் சுப்ரமணியும் விளக்கினர்.

**நினைவிடத்தில் விவசாயஅமைப்பினர் மரியாதை**

ஆத்தூர்:ஆத்தூர் அருகே, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரத்தில், விவசாயிகள் நடத்திய போராட்டத்தில், போலீஸ் துப்பாக்கி சூட்டில்

ஒன்பது பேர் பலியான நாளையொட்டி, அவர்களது நினைவிடத்தில் விவசாயிகள் சங்கத்தினர், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

கடந்த, 1972, ஜூன், 23ம் தேதி, யூனிட் மின்சார கட்டணம் இரண்டு பைசா உயர்த்தியது குறைக்ககோரியும், விவசாயிக்கு வருமான வரி நீக்கம் செய்தல் உள்பட, 15 அம்ச கோரிக்கை வலியுறுத்தி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, விவசாயிகள் சங்கம், காங்கிரஸ் கட்சியினர், 15 நாள் தொடர் போராட்டம் நடத்தினர். அதில், ஜூலை 5ம் தேதி, ஆத்தூர் அருகே, பெத்தநாயக்கன்பாளையம், நரசிங்கபுரத்தில் ஆகிய இடங்களில் நடந்த போலீஸ் துப்பாக்கி சூட்டில், பிச்சமுத்து, கோவிந்தராஜன், ராமசாமி, மணி, ஆறுமுகம், முத்துசாமி, விவேகானந்தன், சாந்தமூர்த்தி, ராமசாமி, ஆகிய ஒன்பது பேர் உயிரிழந்தனர்.இவர்களின் உடல்களை, பெத்தநாயக்கன்பாளையம் குடியிப்பு பகுதியில் அடக்கம் செய்து, நினைவிடம் மற்றும் வீரக்கல் அமைத்துள்ளனர். இந்நிலையில், நேற்று, 43ம் ஆண்டு நினைவு நாளையொட்டி, பல்வேறு அமைப்புகள் சார்பில், துப்பாக்கி சூட்டில் இறந்த விவசாயிகள் நினைவிடத்தில், மலர் தூவி மரியாதை செலுத்தினர். அப்போது, காங்கிரஸ் முன்னாள் எம்.எல்.ஏ., பழனிமுத்து உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பயிர்களை பாதுகாக்க துணிகட்டும் விவசாயிகள்**

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மேட்டுப்பாங்கான நிலங்களில், சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில் புழு, பூச்சிகளை தீனிக்காக பிடிக்க வரும் பறவைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க, வயல் வெளிகளில் குச்சிகளை நட்டு, அதில் துணிகளை கட்டி வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஆண்டுக்கு ஆண்டு பருவமழை பொய்த்து போவதால், நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. குறிப்பாக, மேட்டுப்பாங்கான நிலங்கள் அதிகம் உள்ள, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, வேப்பனப்பள்ளி சுற்று

வட்டாரப்பகுதியில், கடும் வறட்சி ஏற்பட்டு நிலங்களில் புல், பூண்டு கூட முளைக்காமல் வறண்டு காணப்படுகிறது.

இங்கு, சுற்றி திரியும் பறவைகளுக்கு கூட உணவுப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், வேப்பனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் தற்போது நிலத்தடி நீர்மட்டத்தை கொண்டு, ஆங்காங்கே நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிரில், தண்ணீர் கட்டும் போது நிலத்தில் இருந்து புழு பூச்சிகள் வெளி வருகிறது.

அவற்றை பிடித்து சாப்பிட பறவைகள் அதிகம் வட்டமிடுகிறது. இவ்வாறு நிலங்களில் புழு பூச்சிகளை சாப்பிட வரும் பறவைகள், நிலத்தில் உட்காரும் போது செடிகள் உடைந்து சேதமடைகிறது. மேலும், கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் அதிக அளவில் கொக்கு, நாரை போன்ற பறவைகள் படையெடுத்து வருகின்றது.இவ்வாறு கூட்டம், கூட்டமாக வரும் பறவைகள், வயல்களில் உள்ள பூச்சிகளை தின்பதற்காக வயல்களில் அமர்கிறது. கூட்டமாக பறவைகள் நெல் வயல்களில் அமரும்போது, நாற்றுவிட்டுள்ள பயிர்கள் சேதாரமாகிறது. இவ்வாறு சேதமடையும் பயிர்கள் வளராமல் களையெடுக்கும் பருவத்திலேயே காய்ந்து விடும். இதனால், மகசூல் வெகுவாக பாதிக்கும். பறவைகளில் இருந்து செடிகளை காப்பாற்ற, மேட்டுப்பாங்கான நிலங்கள் மற்றும் தண்ணீர்பாங்கான வயல்களில், விவசாயிகள் குச்சிகளை நட்டு அதில், துØணிகளை கட்டி வைத்துள்ளனர். இவ்வாறு கட்டி வைத்துள்ள துணிகள் காற்றுக்கு ஆடும்போது அதில் வரும் சத்தத்தாலும், துணிகள் ஆடுவதாலும் பறவைகள் பயந்து கொண்டு வயல்களில் இறங்காமல் அங்கிருந்து பறந்து செல்கிறது.இதனால், விவசாய பயிர்கள் காப்பாற்றப்படுவதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

**தேசிய நதிகளை இணைக்க வேண்டும்:தமிழக விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

கிருஷ்ணகிரி:தமிழக விவசாயிகள் சங்கத்தின் சார்பில், கிருஷ்ணகிரியில் உழவர் தின விவசாயிகள் பேரணி மற்றும் மாநாடு நடந்தது. மாநில தலைவர் சின்னசாமி தலைமை வகித்தார். கிருஷ்ணகிரி மாவட்ட தலைவர் ஸ்ரீராம்ரெட்டி, மாவட்ட செயலாளர் சென்னைய நாயுடு, மாவட்ட பொருளாளர் முனிரத்தினம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணகிரி புதிய பஸ் ஸ்டாண்ட் அண்ணா சிலை அருகே துவங்கிய பேரணி, டி.பி., லிங்க் ரோடு, பழையபேட்டை காந்தி சிலை, அரசு மருத்துவமனை, ரவுண்டனா வழியாக கார்னேஷன் திடலில் முடிவடைந்தது. இதையடுத்து, அங்கு மாநாடு நடந்தது. மாநாட்டில், மாநில பொது செயலாளர் சுந்தரம், துணை பொது செயலாளர் ராஜசிதம்பரம், பொருளாளர் வேல் மணி ஆகியோர் பேசினர். மாநாட்டில், விசாயிகள் தற்கொலையை தடுக்கும் வகையில், தேசிய வங்கி மற்றும் கூட்டுறவு வங்கி கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் காவிரி மேலாண்மை ஆணையத்தை அமைக்க வேண்டும். பாலாறு மற்றும் முல்லை பெரியாறு பிரச்னையில், தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிரதமர் மோடி, தேர்தலின் போது அளித்த வாக்குறுதிபடி, தேசிய நதிகளை இணைக்கும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். தமிழகத்தில் பாழடைந்துள்ள ஏரிகளை சரி செய்ய வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு, விவசாயிகள் கொண்டு வரும் பால் முழுவதையும் கொள்முதல் செய்ய வேண்டும்.மண் வளம் பெருக, ஏரி, குளங்களில் இருந்து விவசாயத்திற்காக நிபந்தனையின்றி, வண்டல் மண்

எடுத்து கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

டிராக்டர் விவசாயிகள் சங்க தலைவர் மகாராஜன், தர்மபுரி மாவட்ட தலைவர் செங்கோடன், மாவட்ட செயலாளர் சக்திவேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## ஒரே இடத்தில் மஞ்சள் ஏலம்: விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

ஈரோடு:ஈரோட்டில், தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், உழவர் தின பேரணி, கடன் நிவாரண மாநாடு நடந்தது. சங்க மாநில தலைவர் வெங்கிடாசலம் தலைமை வகித்தார். மாவட்ட செயலார் செங்கோட்டையன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.மஞ்சள் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கட்டுப்படியான விலையை, விவசாயிகளே நிர்ணயம் செய்ய, ஈரோட்டில் ஐந்து இடங்களில் நடக்கும் மஞ்சள் சந்தையை, ஒரே இடத்தில், மஞ்சள் மாதிரிகளை வைத்து ஏலம் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். நிலம் கையகப்படுத்தும் அவசர சட்டத்தை, மத்திய அரசு உடனே திரும்ப பெற வேண்டும். விவசாயிகள் தற்கொலையை தடுக்க பயிர் கடன், பொருளீட்டு கடன், பத்திரயீட்டு கடன், டிராக்டர் கடன், சொட்டு நீர் பாசன கடன் மற்றும் விவசாயிகள் பெற்ற கல்வி கடன் உள்ளிட்ட அனைத்து கடன்களையும், தள்ளுபடி செய்து, பயிர் வாரியாக ஏக்கருக்கு, 15 ஆயிரம் முதல், 50 ஆயிரம் ரூபாய் வரை, உற்பத்தி உதவி தொகை வழங்க வேண்டும். அனைத்து விவசாயிகளுக்கும், ஏக்கருக்கு, ஒரு லட்சம் ரூபாய் வரை, வட்டியில்லா கடன் வழங்க வேண்டும். 2015-16ம் ஆண்டு, கரும்புக்கு வெட்டு கூலி இல்லாமல், டன்னுக்கு, 4,000 ரூபாய் வழங்க வேண்டும். வெளி மாநிலத்தில் இருந்து வரும் எரி சாராயம், சர்க்கரையை தடுத்து நிறுத்தி, தமிழகத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையை, மாநில அரசு கொள்முதல் செய்ய வேண்டும்.

தனியார் சர்க்கரை ஆலைகள், விவசாயிகளுக்கு கொடுக்க வேண்டிய நிலுவை தொகையை பெற்று தர, மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.அரசு நெல் கொள்முதல் விலை, கிலோ, 25 ரூபாய், மரவள்ளி குவிண்டால், 2,000 ரூபாய், மக்காசோளம் கிலோ, 20 ரூபாய், எள், 200 ரூபாய், நிலக்கடலை, 60 ரூபாய், தேங்காய் கொப்பரை, 150 ரூபாய், முழு தேங்காய், 20 ரூபாய் என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். காட்டு பன்றியை, வன விலங்கு சட்டத்தில் இருந்து நீக்க வேண்டும்.வாழை விவசாயிகள், இயற்கை சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புகளில் இருந்து, நிவாரணம் பெற, தனியிட தனி நபர் காப்பீடு திட்டத்தை மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும்.

பசும் பால் லிட்டர், 40 ரூபாய், எருமை பால் லிட்டர், 50 ரூபாய் என விலை நிர்ணயம் செய்ய வேண்டும். தென்னக நதிகள் இணைப்பு திட்டத்தை, போர்க்கால அடிப்படையில் மத்திய, மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும்.விவசாயம், குடிநீரை பாதுகாக்க சாய, தோல் ஆலை கழிவுகளை, தடை செய்ய வேண்டும். பிளாஸ்டிக் பைகளையும், உணவு பொருட்களை பிளாஸ்டிக் பைகளில் அடைப்பதையும், தடை செய்ய வேண்டும். எல்.பி.பி., மேட்டூர் இடது, வலது கரை பாசன வாய்க்காலில், கான்கிரீட் போடும் திட்டத்தை, அரசு கைவிட வேண்டும், என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மானிய விலையில் தரமான பொருட்கள்:பட்டு விவசாயிகள் வலியுறுத்தல்**

கோபி:பட்டு வளர்ச்சி விவசாயிகள் சங்க கூட்டம், கோபியில் நடந்தது. தலைவர் சண்முகசுந்தர மூர்த்தி தலைமை வகித்தார். செயலாளர் குணசேகன் முன்னிலை வகித்தார்.பொருளாளர் பாலசுப்பிரமணியம், துணை பொருளாளர் செல்வராஜ், மண்டல இணை இயக்குநர் ஜெயராஜ், உதவி இயக்குநர் ராஜமாணிக்கம் கலந்து கொண்டனர்.

பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 84 அடி உள்ள நிலையில் முதல்போகத்துக்கு தண்ணீர் திறக்க வேண்டும். ஜூன், 20ம் தேதி சேலம் பட்டுவளர்ச்சி துறை இயக்குனருக்கு பதிவு தபால் அனுப்பியும் எந்த பதிலும் இல்லாததற்கு கண்டனம் தெரிவித்தல். இளம்புழுக்கள் எடுத்து செல்வதற்கு போக்குவரத்து மானியம், கடந்த ஐந்து மாதங்களாக வழங்கப்படவில்லை.மத்திய, மாநில அரசின் எல்லா பட்டு முட்டைகளுக்கும் போக்குவரத்து மானியம் வழங்க வேண்டும். பட்டு நூற்பாளர்கள், வியாபாரிகள், எளிதல் சென்று வர, சத்தியமங்கலத்தில் அரசு பட்டுக்கூடு அங்காடி ஏற்படுத்தி, போக்குவரத்தில் உள்ள இன்னல்களை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.பட்டு விவசாயிகளுக்கு மானிய விலையில் கொடுக்கப்படும் பொருட்கள், தரமானதாக இருக்க வேண்டும்.

சீனா பட்டு நூல் கள்ள சந்தை மூலம், பல வழிகளில் வரி செலுத்தாமல், நுழைவதை தடுத்து நிறுத்தி பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற வேண்டும். கூலியாட்கள் பற்றாக்குறை, களையெடுக்கும் செலவு, களை கொல்லிகளை தவிர்க்க, விவசாயிகளுக்கு மினிவீடர் வழங்க வேண்டும், என, தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## கறவை மாடுகளுக்கு ரேஷன் அரிசி: கால்நடை வளர்ப்போருக்கு யோசனை

ஈரோடு:கால்நடைகளுக்கு ரேஷன் அரிசியை அதிகளவில் கொடுக்க கூடாது, என்று கால்நடை துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.நம்பியூர் பழனிகவுன்டன் புதூர், பிலியம்பாளையம், செட்டியம்பதி உள்ளிட்ட கிராமங்களில் ஏராளமான கறவை மாடுகளை, விவசாயிகள் வளர்த்து வருகின்றனர். கறவை மாடுகளில் பாலை கறந்து அருகில் உள்ள பால் கூட்டுறவு மையங்களுக்கு வினியோகம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில், பழனிகவுண்டம் புதூரை சேர்ந்த சின்னையன், ராமசாமி பிலியம்பாளையத்தை சேர்ந்த மாரப்பன், செட்டியம்பதியை சேர்ந்த முத்துசாமி ஆகியோரது ஜெர்சி இன மாடுகள் மர்ம காய்ச்சலால் பாதிக்கப்பட்டு, வாயில் நுரை தள்ளிவாறு சில தினங்களுக்கு முன் இறந்தன. ஈரோடு மண்டல கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பழனிசாமி, கூறியதாவது: சம்பவ பகுதிக்கு கால்நடை துறை குழுவினர் நேரில் சென்று, இறந்த மாடுகளின் சானம், சிறுநீர், ரத்தம், இரைப்பை உணவு மாதிரிகளை சேகரித்தனர்.

அவை ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மாடுகள் மர்ம காய்ச்சலால் இறந்தது போன்று தெரியவில்லை.பால் அதிகளவு கறப்பதற்காக ரேஷன் அரிசி, வேக வைத்த சாப்பாட்டை கால்நடை வளர்ப்போர் வழங்குவது வழக்கம்.அதுபோல் அதிகளவில் ரேஷன் அரிசி, வேக வைத்த சாப்பாட்டை வழங்கி இருக்க கூடும் என்ற சந்தேகம் உள்ளது. எனினும் ஆய்வுக்கு பின்னரே மாடுகள் இறந்ததற்கான காரணம் தெரியவரும். பொதுவாகவே கறவை மாடுகளுக்கு ரேஷன் அரிசி, வேக வைத்த சாப்பாட்டை வழங்குவதை கால்நடை வளர்ப்போர் தவிர்க்க வேண்டும்.இவற்றை அதிகளவில் கால்நடைகள் தொடர்ந்து சாப்பிடும் பட்சத்தில், வயிறு கோளாறு ஏற்படும்."ஃபுட் பாய்சனாக' மாறாவும் வாய்ப்புகள் உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## பலாப்பழம் விற்பனை மலைப்பகுதியில் "ஜோர்'

சத்தியமங்கலம்:சத்தியமங்கலம் மலைப்பகுதிகளில் பலா பழம் விற்பனை, தீவிரமாக நடந்து வருகிறது. வெளி ஊர்களில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள், ஆர்வத்துடன் பலா பழங்களை வாங்கி செல்கின்றனர்.சத்தியமங்கலம் அடுத்துள்ளது திம்பம் மலைப்பகுதி, கடல் மட்டத்தில் இருந்து, 1,105 மீட்டர் உயரம் கொண்டதாகும். இதனால்

இங்கு, எப்போதும் "ஜில்' என்ற தட்பவெப்பம் இருப்பதால், இப்பகுதியை "குட்டி கொடைக்கானல்' என்று அழைப்பது வழக்கம். குளிர் பிரதேசமாக இருக்கும் திம்பம், ஆசனூர், கேர்மாளம், கோட்டாடை, குளியாடை, தாளவாடி, தலமலை உள்ளிட்ட பகுதிகளில், உருளை கிழங்கு, கேரட், பீட்ரூட், முட்டைகோஸ் போன்ற மலைப்பயிர்கள், அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது.

நாள் ஒன்றுக்கு, தாளவாடி பகுதியில் இருந்து, 10 டன்னுக்கு மேல் காய்கறிகள், மேட்டுப்பாளையம், கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்காக வேன், லாரி மூலம் கொண்டு செல்லப்படுகிறது. இதேபோல், கடம்பூர் மலைப்பகுதியும் குளிர் பிரதேசம் ஆகும்.

இதனால், தாளவாடி மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளில், பலா பழம் விளைச்சல் அதிகமாக இருக்கும். கடந்த ஆண்டு இறுதியில், ஓரளவு மழை பெய்ததால், தற்போது பலாப்பழம் விளைச்சல் நன்றாக உள்ளது. தற்போது, ஆசனூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதியை சுற்றியுள்ள கிராமங்களில் விளையும் பலாப்பழம், கடம்பூர் பஸ் ஸ்டாண்ட் மற்றும் ஆசனூர், புளிஞ்சூர் பகுதிகளில், ரோட்டில் வைத்து விற்பனை செய்யப்படுகிறது.

பொதுவாக கடம்பூர் மலைப்பகுதியில் உள்ள மல்லியம்மன் துருவம் பகுதியில் விளையும் பலா பழத்துக்கு தனி மவுசு உண்டு. இதேபோல், ஆசனூர் மலைப்பகுதியில் கோட்டாடை, காளிதிம்பம் பகுதியில் விளையும் பலா பழம், தனி ருசி கொண்டதாகும்.இதனால், சுற்றுலா பயணிகள் ஆசனூர் மற்றும் கடம்பூர் பகுதியில் இருந்து ஆர்வத்துடன் பலாப்பழங்களை வாங்கி செல்கின்றனர். சராசரியான பழம் ஒன்று, 100 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. சிறிய பழங்கள், 20 ரூபாய் முதல் விற்கப்படுகிறது.

## சூரிய திசைக்கேற்ப சுழலும் சோலார் மின் தகடுகள்!:நீலகிரி விவசாய நிலங்களில் புதிய தொழில்நுட்பம்

ஊட்டி:நீலகிரியில், விவசாயத்தில் மின் தேவையை குறைக்க, சுழலும் தகடுகளை கொண்டு, நவீன தொழில்நுட்பத்துடன், 'சோலார் ஸ்பிரிங்லர்' அமைக்கப்பட்டு வருகிறது.

நீலகிரி மாவட்ட வேளாண் பொறியியல் துறை, செயற்பொறியாளர் லூர்து கூறியதாவது: நீர் வளம் நிறைந்த விவசாய நிலங்களில், இத்தொழில் நுட்பத்தை பயன்படுத்தலாம். 'சோலார் ஸ்பிரிங்லர்' அமைக்க, ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும். இதில், நான்கு லட்சம் ரூபாய், அரசின் மானியமாக வழங்கப்படும். நீலகிரியில் கடந்தாண்டு, 16 விவசாயிகள், சோலார் ஸ்பிரிங்லர் அமைக்க விண்ணப்பம் பெற்றனர்; 11 பேர் அமைத்து முடித்துள்ளனர். பேரார் உட்பட பல பகுதிகளில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுகிறது. நடப்பாண்டில், அதிக விவசாயிகளை திட்டத்தில் இணைக்க, தேசிய வேளாண் வளர்ச்சி துறை அறிவுறுத்தியுள்ளது. தோட்டக்கலை துறையினர் மூலம், பயனாளிகளிடம் இருந்து விண்ணப்பங்களை பெறும் பணி நடந்து வருகிறது.இவ்வாறு, லூர்து தெரிவித்தார்.சுழலும் தகடுகள்!நீலகிரி உட்பட மலை, மரங்கள் நிறைந்த மாவட்டங்களில் மேக மூட்டம் அவ்வப்போது குறுக்கிடும்; சூரிய வெளிச்சம் சீராக கிடைக்காது. இதனால், விவசாய நிலங்களில் பொருத்தப்படும் சோலார் தகடுகள், சூரிய வெளிச்சத்துக்கு ஏற்ப, சுழலும் தன்மை கொண்டவையாக தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இதன் மூலம், சூரியனின் திசைகேற்ப, சோலார் தகடுகள் சுழன்று, சக்தியை ஈர்க்கின்றன.

## தென்னையில் ஊடுபயிராக வெண்டைக்காய்

நத்தம்:நத்தம் பகுதியில் தென்னை மரங்களுக்கு இடையே வெண்டைக்காயை ஊடுபயிராக செய்து விவசாயிகள்

பயனடைகின்றனர். நத்தம் சுற்று வட்டார பகுதிகளான எரமநாயக்கன்பட்டி, முளையூர், புண்ணப்பட்டி பகுதிகளில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. உயரமாக வளர்ந்த தென்னைகளுக்கு இடையே ஊடுபயிர் செய்யும் முறை விவசாயிகளிடையே உள்ளது. கருணைக் கிழங்கு, கோக்கோ, வாழை உள்ளிட்டவை தென்னைகளுக்கு இடையில் ஊடுபயிராக சாகுபடி செய்யப்படுகிறது. அதன் வரிசையில் வெண்டை பயிரையும் தற்போது சாகுபடி செய்கின்றனர். அடர்த்தி குறைவாக உள்ள தென்னந்தோப்புகள் இம்முறை சாகுபடிக்கு ஏற்றதாகும்.

இதில் செடிகளுக்கு தேவையான சூரிய ஒளி கிடைக்கும். பயிர் செய்ததிலிருந்து 75 நாட்களில் காய்க்க துவங்கிவிடும். இரண்டு நாட்களுக்கு ஒரு முறை காய்கள் பறிக்கலாம். நன்றாக பராமரித்து வந்தால் தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு பலன் தரும்.

விவசாயி முருகன் கூறியதாவது, "தென்னைக்கு பாய்ச்சும் தண்ணீரை விட சற்று கூடுதலாக நீர் பாய்ச்சினால் போதுமானது. மூன்று மாதங்களுக்கு தொடர்ந்து வருமானம் கிடைக்கும். தேங்காய் மற்றும் வெண்டையில் இரட்டிப்பு வருமானம் கிடைக்கிறது. தொடர்ந்து ஊடுபயிர் சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளேன், என்றார்.

## ஆரோக்கியமாக வாழ இயற்கை உணவே சிறந்தது:தினமலர் பயிற்சியில் தகவல்

திண்டுக்கல்: ""ஆரோக்கியமாக வாழ இயற்கை உணவே சிறந்தது,'' என தினமலர் சார்பில் திண்டுக்கல்லில் நடந்த, பெண்களுக்கான இலவச அடுப்பில்லா ஆரோக்கிய சமையல் பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

இந்த பயிற்சி எஸ்.எம்.பி., மெட்ரிக் பள்ளியில் அளிக்கப்பட்டது. இதில் தாய்வழி இயற்கை உணவகம் சிவகாசி ஜி.மாறன் பேசியதாவது: நவீன

மருத்துவத்தில் ஒரு நோய்க்கு சாப்பிடும் மருந்து மற்றொரு நோயை உண்டாக்குகிறது. சூரியன் என்ற இயற்கை அடுப்பு மூலம் தாவரங்களில் உணவு தயாரிக்கப்படுகிறது. அந்த உணவை அப்படியே உண்ணலாம். உணவே மருந்து என்பதால் இயற்கை உணவை சாப்பிட்டால் ஆரோக்கியமாக இருக்கலாம்.

உணவை சமைத்து சாப்பிடுவது சொந்த காசில் சூனியம் வைப்பது போன்றது. பச்சைக் காய்கறிகளில் உள்ள பச்சையத்தை அழித்துவிடக் கூடாது. சரியான நேரத்தில் உணவு உண்ண வேண்டும். இரவு 7 மணிக்குள் சாப்பிட்டுவிட வேண்டும். கர்ப்பிணிகளின் உணவு பழக்கம் குழந்தைகளை பாதிக்கும். ஒரு கைப்பிடி முளைக்கட்டிய தானியம் 7 முட்டைகளின் புரதச்சத்திற்கு ஈடானது. காலையில் டீ, காபிக்கு பதிலாக 2 வாழைப்பழம், 2 தேங்காய், 2 பேரிச்சம் பழம் சாப்பிடலாம். மதிய உணவுக்கு முன் பப்பாளியும், இரவு உணவுக்கு முன் முளைகட்டிய தானியங்களை உண்ணலாம்.

உப்பு அதிகமாக சேர்க்கும்போது பல்வேறு நோய்கள் உண்டாகின்றன. இயற்கை உணவில் தேவையான தாதுஉப்புகள் இருக்கும். உணவை சமைக்கும் தாதுஉப்புகள் அழிந்துவிடுவதால் உப்பு சேர்க்க வேண்டியுள்ளது. எனவே காய்கள், கனிகளை அப்படியே எந்த சேதமின்றி சாப்பிட வேண்டும். மேலும் கடல் உப்புகளுக்கு பதிலாக பாறைகளில் இருந்து கிடைக்கும் இந்துப்புகளை பயன்படுத்தலாம், என்றார்.

எலுமிச்சம் பழ அவல், கம்பு அவல் பாயாசம், கறிவேப்பிலை கீர், தக்காளி அவல் புட்டு, இருமலை கட்டுப்படுத்தும் மூலிகை சூப், பிஞ்சு வாழை பசும்பொறியல், செம்பருத்தி பூ சர்பத், கல்யாண பூசணி அல்வா, கற்றாழை ரோஜா பாயாசம், இயற்கை ஊறுகாய், ஸ்பரவுட்ஸ் சாலட், இயற்கை தயிர் சாதம் ஆகிய உணவுகள் தயாரிப்பது குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியில் தயாரித்த உணவுகள் அனைத்தும்

பங்கேற்றோருக்கு வழங்கப்பட்டன. பயிற்சிக்கு சமையல் கலைஞர்கள் கவுசல்யா, அமுதா உதவினர். "நாங்க மாறிட்டோம்... அப்ப, நீங்க...' என்.ஷோபனா, நாகல் நகர்: அடுப்பு இல்லாமல் என்ன சமையல் செய்ய போகிறார்கள். தானியங்களை மட்டும் வைத்து சமையல் செய்ய போகிறார்களோ என நினைத்தேன். ஜூஸ் முதல் தயிர் சாதம் வரை செய்து அசத்திவிட்டனர். அவற்றை செய்வதை மட்டும் விளக்காமல், உண்ணவும் கொடுத்ததால் இயற்கை உணவு மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது. சுவையாகவும் இருப்பதால் அவற்றை வீட்டில் செய்து குடும்பத்தினருக்கு கொடுப்பேன்.

எம். பிரேமா, விவேகானந்தாநகர்: பயிற்சி மிகவும் உபயோகமாக இருந்தது. உணவே மருந்து; எளிய முறையில் இயற்கை உணவை தயாரிக்கலாம் என்பதை தெரிந்து கொண்டேன். இயற்கை உணவில் இத்தனை வகை உணவு தயாரிக்க முடியும் என்பது ஆச்சரியமாக உள்ளது. எங்கள் குடும்ப உணவு பழக்கத்திலும் சில மாற்றங்களை செய்ய உள்ளேன். தினமலருக்கு நன்றி. வி.கீர்த்தனா, அரசு நகர்: இயற்கை உணவின் பயன் குறித்து தெரிந்து கொண்டேன். அடுப்பில் சமைக்கும் உணவை விட, இயற்கை உணவு தயாரிக்க நேரம், பணம் மிச்சமாகிறது. டாக்டரிடமும் செல்ல தேவையில்லை. இதனால் இயற்கை உணவே அதிகளவில் தயாரிப்பேன். இனி டீ, காபி, பாலுக்கு பதிலாக நவதானிய பால் குடிப்போம். பி.மகாலட்சுமி, கல்லூரி மாணவி, ஆர்.எம்.காலனி: இயற்கை உணவு குறித்து படித்ததை விட பயிற்சியில் ஏராளமான விஷயங்களை தெரிந்து கொண்டேன். இதற்கு ஏற்பாடு செய்த தினமலர் இதழின் சேவை பாராட்டுக்குரியது. இயற்கை உணவின் பயன், அதன் தயாரிப்பு குறித்து தோழிகள், உறவினர்களிடம் தெரிவிப்பேன். சத்தான உணவான முளைக்கட்டிய தானியங்களை உண்பேன்.

**தோட்டக்கலை பயிர்களுக்குமுழு மானியத்துடன் பசுமைக்குடில்**

ராமநாதபுரம்:தோட்டக்கலை பயிர் சாகுபடிக்கு 50 சதவீத அரசு மானியத்துடன் பசுமைக் குடில், நிழல் வலை குடில் அமைக்க விரும்பும் விவசாயிகள் விண்ணப்பிக்கலாம்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம், நுண்ணீர் பாசன திட்டம், மானாவாரி பயிர்கள் அபிவிருத்தி திட்டம் செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடிக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமாக ஏக்கருக்கு ரூ.85 ஆயிரத்து 400 வழங்கப்படும். இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமாக ரூ.64 ஆயிரம் வழங்கப்படும். ஊடு பயிராக உளுந்து உள்ளிட்ட பயறுவகை பயிர்களுக்கு 50 சதவீத மானியமாக ரூ.25 ஆயிரம் வழங்கப்படும். பசுமைக்குடில்(500 சதுர மீட்டர்) அமைக்க ரூ.2.76 லட்சம், நிழல் வலை குடில்(ஆயிரம் சதுர மீட்டர்) அமைக்க ரூ.1.75 லட்சம் வழங்கப்படும். பவர் டில்லர், டிராக்டர் உள்ளிட்ட இயந்திரங்கள், விதைகள் வாங்க 50 சதவீத மானியத்தில் ரூ.75 ஆயிரம் வரை வழங்கப்படும், என தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர்(பொறுப்பு) இளங்கோ தெரிவித்தார்.

**செட்டிநாடு கால்நடை பண்ணையில் புல் வளர்ப்பில் ரூ.1.40 கோடி லாபம்**

சிவகங்கை:""செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் பசும்புல் வளர்த்து விற்பதன் மூலம், 2 ஆண்டுக்கு ரூ.1.40 கோடி வரை வருவாய் கிடைக்கிறது,'' என சிவகங்கை கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் விஸ்வநாதன் தெரிவித்தார். அவர் கூறியதாவது: செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணை 1957ல் 1,907 ஏக்கரில் துவக்கப்பட்டு செயல்படுகிறது. இங்கு, விவசாயிகளுக்கு குறைந்த விலையில் பால்,

முட்டை வழங்கப்பட்டது. வளர்ப்பு, இனப்பெருக்கத்திற்காகவும், ஜெர்சி, பிரிசியன், தர்பார்க்கர், கிடேரி, காளை கன்றுகள் அரசு நிர்ணயித்த விலையில் வழங்கப்பட்டது. ஜமுனாபாரி தலைச்சேரி வெள்ளாடு, ராமநாதபுரம் செம்மறி ஆடுகள், வெள்ளை பன்றி வழங்கப்பட்டு, அதன் குட்டிகள் அரசு விலைக்கு வழங்கப்படுகிறது.

கிரிராஜா ரக கோழிகள் வளர்க்கப்பட்டு குஞ்சு பொரித்து, 7 ஆயிரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கிரிராஜா கோழி 3 மாதங்களில் 3 கிலோ எடை வரும். ஆண்டுக்கு 150 முட்டை வரை இடும். ஒரு கிலோ ரூ.150க்கு விற்றால் ரூ.600 வரை லாபம் கிடைக்கும். குஞ்சுகள் ரூ.20க்கு விற்கப்படுகிறது. டாக்டர் தேசிங்கு கோழிவளர்ப்பு பயிற்சி அளிக்கிறார். இங்கு, ஐ.டி.எஸ்.ஆர்.ஆர்., திட்டத்தில் 97 தலைச்சேரி ஆடுகள் வழங்கப்படுகிறது. ராஜஸ்தானில் ஜமுனாபாரி ஆடு வாங்கி வளர்க்கிறோம். ஆட்டு குட்டிகள் அரசு நிர்ணயித்த விலைக்கு கிடைக்கும். இங்கு, 100 பெண், 20 ஆண் பன்றிகள் வளர்த்து ஆண்டுக்கு 2000 குட்டிகள் வரைபோடுகின்றன. மாவட்டத்தில் 10 விவசாயிகள் வெள்ளை பன்றி வளர்க்கின்றனர். புல் வளர்ப்பு: மாநிலத்திலேயே அதிக அளவில் பசும்புல் சாகுபடி செய்யும் பண்ணையாக செட்டிநாடு உள்ளது. இங்கு, 240 ஏக்கரில் தீவன அபிவிருத்தி திட்டத்தில் பசும்புல் வளர்க்கப்படுகிறது. இந்த புல் விற்பனை மூலம் 2 ஆண்டுக்கு ரூ.1.40 கோடி வருவாய் கிடைத்துள்ளது, என்றார்.

## நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்ப பயிற்சி

சிவகங்கை:சிவகங்கை அருகே குடஞ்சாடி பண்ணை பள்ளியில் நிலக்கடலை சாகுபடி குறித்த தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. கோடை உழவின் முக்கியத்துவம், விதை விதைக்கும் கருவி மூலம் வரிசையாக விதை விதைத்தல், மண் பரிசோதனை அடிப்படையில் உரம் இடுதல்,

ஊட்டமேற்றிய தொழு உரம் இடுதல், களை எடுக்கும் போது ஜிப்சம் இட்டு மண் அணைத்தல் போன்ற தொழில்நுட்ப கருத்துக்களை வேளாண்மை உதவி இயக்குனர் தனபாலன் வழங்கினார். விதை நேர்த்தி செய்வதின் மூலம் ஏற்படும் நன்மை,நிலக்கடலையை தாக்கும் பூச்சிகளை உயிரியல் முறையில் கட்டுபடுத்தும் முறை பற்றி குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலை பேராசிரியர் சி.சங்கர் கூறினார். வேளாண்மை அலுவலர் லட்சுமணன் உள்ளிட்டோர் பயிற்சி அளித்தனர். ஏராளமான விவசாயிகள் தொழில்நுட்ப பயிற்சி பெற்றனர்.

**கோடை காலம் முடிந்த பின்னரும் தமிழ்நாட்டில் வெயில் கொளுத்துவது ஏன்? வானிலை அதிகாரி விளக்கம்**




சென்னை, தமிழ்நாட்டில் கோடை காலம் முடிந்த பிறகும் வெயில் கொளுத்தி வருகிறது.

<u>2–வது கோடைகாலம்?</u>

சென்னை உள்ளிட்ட பெரும்பாலான தமிழக நகரங்களில் கடந்த சில நாட்களாகவே வெயிலின் தாக்கம் கடுமையாக காணப்படுகிறது.

சென்னையில் நேற்று வெயில் அளவு 100.4 டிகிரியாக இருந்தது. 2–வது கோடை காலம் வந்துவிட்டதோ? என்று கூறும் அளவுக்கு சென்னையில் வெயில் கொளுத்தியது.

<u>வீடுகளில் வெப்பக்காற்று</u>

சென்னையில் நேற்று காலையில் இருந்து மாலை வரை வெயிலின் தாக்கம் இருந்தது. இதனால் சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக காணப்பட்டது. குளிர்சாதன வசதி செய்யப்பட்ட வீடுகள் தவிர மற்ற வீடுகளில் உள்ள மக்கள் வியர்வை மழையில் நனைந்தனர். சாலைகளில் நடந்து சென்றவர்களும், இரு சக்கரவாகனங்களில் சென்றவர்களும் சிரமபட்டு சென்றனர். வீடுகளில் மின் விசிறிகள் ஓடியும் அவை வெப்பக்காற்றையே உமிழ்ந்தன. பஸ்கள், மின்சார ரெயில்களின் கைப்பிடி கம்பிகளும் சுட்டன. குடிநீர் குழாய்களில் தண்ணீர் சுடுநீர்போல் வந்தது. பஸ்களில் பெண்கள், முதியவர்கள், குழந்தைகள் மிகவும் சிரமப்பட்டுதான் பயணம் செய்தனர்.

அதிக வெயில் காரணமாக இளநீர், ஐஸ்கிரீம், மோர், சர்பத், பழச்சாறு, குளிர்பானங்கள் விற்பனை ஜோராக நடந்தது. <u>மெரினாவில் குவிந்த மக்கள்</u>

இப்படி பகல் முழுவதும் வீடுகளில் அதிக வெயில் காரணமாக முடங்கி கிடந்த சென்னை நகர மக்கள் மாலையில் வெயிலின் தாக்கத்தில் இருந்த தப்பிக்க மெரினா கடற்கரையில் குவிந்தனர். அலைகளில் கால் நனைத்து வெப்பத்தை தணித்தனர். இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:–

<u>கடல்காற்று தாமதம்</u>

தமிழ்நாட்டில் பகல்நேரத்தில் வானம் மிகவும் தெளிவாக காணப்படுகிறது. இதனால் வெயிலின் கடுமை அதிகமாக இருக்கிறது. மேலும் கடல் காற்று தாமதமாகத்தான் நிலப்பகுதியை நோக்கி வீசுகிறது. இதன் காரணமாகவும் வெயில் அதிகமாக கொளுத்தி வருகிறது. இன்னும் சில நாட்களில் தமிழ்நாட்டில் மழையை எதிர்பார்க்கலாம். அப்போது

மீண்டும் கோடை காலம் திரும்பியது போல வெயில் அடிக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து அதிகரிப்பு செவ்வாழை ரூ.900-க்கு விற்பனை**



பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நேற்று வாழைத்தார் வரத்து அதிகரித்து காணப்பட்டது. செவ்வாழைத்தார் ரூ.900-க்கு விற்பனையானது.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன்கிழமைகளில் வாழைத்தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு பொள்ளாச்சி, ஆனைமலை உள்பட தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்து விவசாயிகள் வாழைத்தார்களை விற்பனைக்கு கொண்டு வருகிறார்கள். இவற்றை உள்ளூர், வெளியூர் வியாபாரிகள் ஏலம் மூலம் வாங்கி செல்கிறார்கள். இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் வாழைத்தார் ஏலம் நடைபெற்றது. ஏலத்துக்கு மோரிஸ், பூவந்தார், செவ்வாழை உள்பட பல்வேறு

வாழைத்தார்கள் என மொத்தம் 1500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இதில் பூவந்தார் ஒன்று ரூ.150 முதல் ரூ.400 வரையும், கற்பூரவள்ளி ரூ.200 முதல் ரூ.500 வரையும், செவ்வாழை ரூ.200 முதல் ரூ.900 வரையும், மோரீஸ் ரூ.100 முதல் ரூ.450 வரையும், நேந்திரம் ஒரு கிலோ ரூ.35-க்கும், கதளி ரூ.27-க்கும் விற்பனையானது. வரத்து அதிகரிப்பு இது குறித்து மொத்த வியாபாரி ஒருவர் கூறியதாவது:- பொள்ளாச்சி மார்க்கெட்டில் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 1000 வாழைத்தார்கள் தான் வந்தன. தற்போது மழை இல்லாததால் வாழைத்தார்கள் வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக நேற்று 1500 வாழைத்தார்கள் விற்பனைக்கு வந்தன. இவைகள் சராசரியாக ரூ.50 முதல் ரூ.100 வரை விலை அதிகரித்து காணப்பட்டது. மேலும் அதிகபட்சமாக செவ்வாழைத்தார் ரூ.900-க்கு விற்பனையானது. இவ்வாறு அவர் கூறினார்.

**பெரியாறு பாசன நிலங்களுக்கு உடனே தண்ணீர் திறக்க வேண்டும் விவசாயிகள் சங்கம் கோரிக்கை**



வாடிப்பட்டி,

பெரியாறு பாசன நிலங்களுக்கு உடனே தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. கோடை மழை மதுரை மாவட்டம் வாடிப்பட்டி விவசாயிகள் சங்கம் தலைவர் மேட்டு நீரேத்தான் மகாலிங்கம் தமிழக முதல்அமைச்சருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:- பேரணை முதல் கள்ளந்திரிவரை உள்ள 45ஆயிரம் ஏக்கர் நன்செய் நிலங்களுக்கு இருபோக சாகுபடியில் முதல் போகத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 1-ந்தேதி முதல் 10-ந்தேதிக்குள் தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக பருவ மழை பொய்த்து போனதாலும், இயற்கையின் ஒத்துழைப்பு இல்லாததாலும் விவசாய பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஒரு போக சாகுபடி விவசாயம் செய்வதற்கே தண்ணீர் கிடைக்காத நிலை இருந்து வந்தது. ஆனால் இந்த வருடத்தில் பருவ மழை போல கோடையிலும் மழை கொட்டி தீர்த்தது.

அக்னிநட்சத்திரத்திலும் அடிக்கடி மழைபெய்தது. மேலும் தற்போது முல்லைபெரியாறு பகுதிகளில் நல்லமழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் 128அடியாக உயர்ந்துள்ளது. முதல் வாரத்தில்... தற்போது வரை முல்லை பெரியாறு அணைக்கு நீர்வரத்து 2307கனஅடியாக உள்ளது. நீர்இருப்பு 4072மில்லியன் கன அடியாகவும் இருந்து வருகிறது. முல்லை பெரியாறு, வைகை அணைகளில் மொத்தம் 4ஆயிரம் மில்லியன் கனஅடி இருந்தாலே பாசனத்திற்கு தண்ணீர் திறக்கலாம் என்ற விதி உள்ளது. ஆனால் தற்போது பெரியாறு அணையில் 4ஆயிரம் மில்லியன் கனஅடிக்குமேல் தண்ணீர் இருப்பு உள்ளதால் வைகை அணையில் உள்ள தண்ணீரை நாற்றாங்கால் அமைப்பதற்கு, பெரியாறு பாசன நிலங்களுக்கு இந்த மாதம் உடனே திறந்துவிட முதல் அமைச்சர் உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் மாவட்ட வருவாய் அதிகாரி தகவல்**




பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டத்தில் வங்கிகளில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கப்படுகிறது என மாவட்ட வருவாய் அதிகாரி மீனாட்சி கூறினார். இது குறித்து அவர் தெரிவித்தாவது:– வங்கிகளில் பயிர்க்கடன்

பெரம்பலூர் மாவட்டத்தில், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும் சிறப்பு முகாம் ஜூலை 21–ந் தேதி வரை வருவாய் கிராமங்கள்வாரியாக சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் நடந்து வருகிறது. விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி குறைந்த வட்டியில் பயிர்கடன் பெற்று பயனடையலாம். மேலும் 2015–2016ம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கடன் அளவு அடிப்படையில் பயிர்கடன் வழங்கப்படும். இது வரை பயிர்கடன் பெறாத விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இதற்கு முன்னர் பயிர்கடன் பெற்றிருந்தால் அக்கடனை உரிய காலத்தில் திருப்பி செலுத்த வேண்டும்.

செட்டிகுளம், பசும்பலூர் பகுதிகளில்...

பயிர்கடன் பெற விரும்பும் கீழ்கண்ட தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் அண்மையில் பெற்ற கணினி சிட்டா, அடங்கல், குடும்ப

அட்டை நகல், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் சான்று, தங்களது சேவை வங்கியில் சேமிப்பு கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம் 2 மற்றும் வாக்காளர் அடையாள அட்டை ஓட்டுனர் உரிமம் அட்டை ஆதார் அட்டை, இவற்றில் ஏதேனும் ஒன்று ஆகியவற்றுடன் இம் முகாமில் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேற்கண்ட சான்றுகள் எளிதில் பெற வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை வருவாய்த்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் முகாம் நாளில் கலந்து கொள்ள உள்ளார்கள். இன்று 6–ந் தேதி (திங்கட்கிழமை) பொம்மணப்பாடி, புதுநடுவலூர் ஆகிய கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் ஆண்டிக்குரும்பலூர், பெருமத்தூர்(தெற்கு), வடக்கலூர் ஆகிய கிராமங்களிலும், ஆலத்தூர் வட்டத்தில் செட்டிக்குளம், சிறுகன்பூர்(கிழக்கு), ஆதனூர்(வடக்கு) ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்தில் பசும்பலூர்(தெற்கு), மேட்டுப்பாளையம்(வடக்கு), வெங்கனூர் ஆகிய கிராமங்களிலும் நடைபெற உள்ளது.

நாளை (செவ்வாய்க்கிழமை ) பெரம்பலூர் வட்டத்தில் லாடபுரம்(வடக்கு), துறைமங்கலம் ஆகிய கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் சிறுமத்தூர், ஒகளூர்(மேற்கு), புதுவேட்டக்குடி ஆகிய கிராமங்களிலும், ஆலத்தூர் வட்டத்தில் இரூர், சிறுகன்பூர்(மேற்கு), ஆதனூர்(தெற்கு) ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்தில் கை.களத்தூர்(மேற்கு), மேட்டுப்பாளையம்(தெற்கு), தழுதாலை பகுதியில் முகாம் நடைபெற உள்ளது.

கை.களத்தூர் பகுதியில்......

8–ந் தேதி (புதன்கிழமை) பெரம்பலூர் வட்டத்தில் லாடபுரம்(கிழக்கு), செங்குணம் ஆகிய கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் கீழப்புலியூர்(வடக்கு), ஒகளூர்(கிழக்கு), துங்கபுரம்(வடக்கு) ஆகிய கிராமங்களிலும், ஆலத்தூர் வட்டத்தில் நக்கசேலம்,

புதுஅம்மாபாளையம், கொட்டரை, ஜமீன் ஆத்தூர் ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்தில் கை.களத்தூர்(கிழக்கு), பேரையூர், அரும்பாவூர் ஆகிய பகுதிகளில் முகாம் நடக்கிறது. 9–ந் தேதி (வியாழக்கிழமை)பெரம்பலூர் வட்டத்தில் அம்மாபாளையம், நொச்சியம் ஆகிய கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் கீழப்புலியூர்(தெற்கு), அத்தியூர்(வடக்கு), துங்கபுரம்(தெ) ஆகிய கிராமங்களிலும், ஆலத்தூர் வட்டத்தில் டி.களத்தூர், கொளத்தூர்(மேற்கு), கூடலூர் ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்தில் பில்லங்குளம், தேவையூர்(வடக்கு), மலையாளப்பட்டி ஆகிய கிராமங்களிலும் முகாம் நடைபெற உள்ளது.

10–ந் தேதி (வெள்ளிக்கிழமை) பெரம்பலூர் வட்டத்தில் களரம்பட்டி, அரனாரை(வடக்கு), ஆலம்பாடி ஆகிய கிராமங்களிலும், குன்னம் வட்டத்தில் எழுமூர்(மேற்கு), அத்தியூர்(தெற்கு), காடூர்(வடக்கு) ஆகிய கிராமங்களிலும், ஆலத்தூர் வட்டத்தில் கன்னாபாடி, குளத்தூர்(கிழக்கு), புஜங்கராயநல்லூர் ஆகிய கிராமங்களிலும், வேப்பந்தட்டை வட்டத்தில் காரியனூர், தேவையூர்(தெற்கு), தொண்டமாந்துறை(மேற்கு) ஆகிய கிராமங்களிலும் முகாம் நடைபெற உள்ளது.

எனவே அன்றைய தினம் தகுதியுள்ள அனைத்து விவசாயிகளும் முகாமில் கலந்து கொண்டு பயிர்கடன் பெற்று பயனடையலாம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**வேப்பந்தட்டையில் தேசிய தோட்டக்கலை மானியத்திட்ட பதிவு முகாம்**



வேப்பந்தட்டை,

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தோட்டக்கலை அலுவலகத்தில் துணை இயக்குனர் இந்திரா வழிகாட்டுதலின் படி விவசாயிகளுக்கான மானியத்திட்ட சிறப்புபதிவு முகாம் நடைபெற்றது. அதாவது ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தில் மானியத்தில் பயன்பெற விருப்பமுள்ள விவசாயிகளிடம் விண்ணப்பம் பெறப்பட்டது. இதில் மா அடர் நடவு, வீரிய காய்கறிகள் சாகுபடி, சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் சாகுபடி மற்றும் மிளகாய் சாகுபடி செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் விண்ணப்பித்தனர். மேலும் பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்தின்கீழ் பாலித்தீன் பசுமை குடில் அமைக்கவும், நிழல் வலை அமைக்கவும், நெகிழி மூடாக்கு அமைக்கவும், அயல் மகரந்த சேர்க்கையை அதிகப்படுத்தும் வகையில் தேனீக்கள் வளர்க்கவும் விருப்பமுள்ளவர்களிடம் விண்ணப்பம் பெறப்பட்டது. விண்ணப்பித்த விவசாயிகளிடம் நிலத்திற்காக கணினி சிட்டா, அடங்கல், குடும்ப அட்டை நகல், நில வரைபடம் மற்றும் 3 பாஸ்போட் அளவு புகைப்படம் ஆகியவை பெறப்பட்டன. இதில் சுமார் 165 க்கும் மேற்பட்ட விவசாயிகள் விண்ணப்பித்தனர். இந்த விண்ணப்பங்களை

தோட்டக்கலை துணை இயக்குனர்( தொழில் நுட்பம் ) விஜய காண்டீபன், வேப்பந்தட்டை தோட்டகலை அலுவலர் ஆனந்தன், வேளாண்மை அலுவலர்கள் வீராசாமி, மூர்த்தி, சந்திரசேகர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

**அனைத்து விவசாயிகள் சங்க பொது மாநாடு புதுக்கோட்டையில் நடந்தது**



புதுக்கோட்டை,

புதுக்கோட்டையில், அனைத்து விவசாயிகள் சங்க பொது மாநாடு நடைபெற்றது. <u>பொது மாநாடு</u>

அனைத்து விவசாயிகள் சங்க பொது மாநாடு புதுக்கோட்டையில் நடைபெற்றது. சங்க தலைவர் மாரிமுத்து தலைமை தாங்கினார். காவிரி வைகை குண்டாறு கூட்டமைப்பு தலைவர் ஆரோக்கியசாமி, மாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டில் தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க மாநில தலைவர் அய்யாக்கண்ணு, சிவகங்கை நகர் மன்ற தலைவருமான அர்ச்சுணன் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசினர். கூட்டத்தில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

<u>விளைபொருள் விலை வீழ்ச்சி</u>

மாநாட்டில் இன்றைய தினம் விவசாயிகள் சந்திக்கும் கடுமையான நெருக்கடி, வாழ்க்கை பிரச்சினைகள், கடன் நெருக்கடி, விவசாய விளை பொருள் விலை வீழ்ச்சி ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

விவசாயிகள் வாழ்க்கையை பாதுகாத்திட விவசாயிகள் சங்கங்களின் ஒற்றுமையை உருவாக்கிடவும் முடிவு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக விவசாயிகள் சங்க ரவி வரவேற்றார். முடிவில் காவிரி வைகை குண்டாறு கூட்டமைப்பு காமராஜ் நன்றி கூறினார்.

**இந்தியாவில் 70 சதவீதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள் இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன் பேச்சு**




இலுப்பூர்,

இந்தியாவில், 70 சதவீதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள் என இந்திய கம்யூனிஸ்டு கட்சி மாநில செயலாளர் முத்தரசன் பேசினார்.

<u>பொதுக் கூட்டம்</u>

புதுக்கோட்டை இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக நிதியளிப்பு பொதுக் கூட்டம் அன்னவாசல் கடைவீதியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர் தர்மராஜன் தலைமை தாங்கினார். முன்னாள் பேரூராட்சி கவுன்சிலர்கள் முகமதுரிசா, ஜெயாசண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக மாவட்ட குழு உறுப்பினர் கணேசன் வரவேற்று பேசினார்.

கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாநிலசெயலாளர் முத்தரசன் பேசியதாவது:–

பாரதீய ஜனதா கட்சியின் தேசிய செயலாளர் ராஜா முஸ்லீம் மாணவிகள் பர்தா அணிய கூடாது என்கிறார். இந்தியாவில் 70 சதவீதம் மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். இந்தியாவின் இதயம் கிராமபுறங்களில் தான் உள்ளது என்று இந்திய பிரதமராக இருந்து மறைந்த பண்டிட் ஜவஹர்லால்நேரு கூறி, வேளாண்மைத் துறைக்கு முக்கியம் கொடுத்தார்.

<u>நிர்வாக குளறுபடி</u>

தற்போது மத்தியில் பிரதமராக இருக்கும் மோடி விவசாயிகளிடம் இருந்து நிலம் பறிப்பு சட்டம் கொண்டு வருகிறார். ஒரு திட்டத்தை செயல்படுத்துவது அரசின் கடமை. நிர்வாக குளறுபடி இருந்தால் அதை சரி செய்யாமல் வேலை வாய்ப்பு திட்டத்தை முடக்குகிறார்கள். பொதுத்துறை நிறுவனங்களான தனியார் மயமாக்க முயற்சிக்கிறார்கள். தமிழ்நாட்டில் அ.தி.மு.க செல்வாக்கு குறைந்து விட்டது. இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் அன்னவாசல் ஒன்றிய சார்பாக முதல் கட்டமாக 1 லட்சத்து ஓராயிரம் கட்சி வளர்ச்சி நிதியாக வழங்கப்பட்டது. இதில் மாவட்ட செயலாளர் செங்கோடன் மாநில குழு உறுப்பினர் ஏனாதி. இராசு, விவசாய தொழிலாளர் சங்க பொறுப்பாளர் சுந்தராசன் விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாதவன் நிர்வாக குழு உறுப்பினர்கள், மாவட்ட பொருளாளர் திருநாவுக்கரசு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கள்ளக்குறிச்சி பகுதியில் குண்டு மல்லி பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம்**



கள்ளக்குறிச்சி,

கள்ளக்குறிச்சி பகுதியில் குண்டு மல்லி பயிர் செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குண்டு மல்லி கள்ளக்குறிச்சி பகுதி மக்கள் பெரும்பாலானோர் விவசாயத்தை நம்பி வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக நெல், கரும்பு, மஞ்சள், மக்காச்சோளம், எள், மணிலா, மரவள்ளி உள்ளிட்ட பயிர்களை விவசாயிகள் அதிகளவில் பயிர் செய்துள்ளனர். இதில் இந்திலி, மலைக்கோட்டாலம், புக்கிரவாரி, விளம்பார், பெரியசிறுவத்தூர், வானவரெட்டி உள்ளிட்ட 25–க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் சிலர் தங்களது விளைநிலங்களில் குறைந்த செலவில் அதிக லாபம் தரும் குண்டு மல்லியை ஆர்வத்துடன் பயிர் செய்து வருகின்றனர்.

ஏக்கருக்கு ரூ.2 லட்சம்

இதுகுறித்து இந்திலியை சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில், நான் கடந்த 9 ஆண்டுகளாக குண்டு மல்லி செடி பயிர் செய்து வருகிறேன். ஆண்டுதோறும் 2 முறை உரம் போடுவேன். ஜனவரி மாதம் செடியின் கொடி மற்றும் இலைகளை துண்டித்துவிடுவேன். பின்னர் செடி

துளிர்விட்டு மொட்டு விடதொடங்கும். மார்ச் மாதம் முதல் பூ பறிக்கும் பணியை தொடங்குவோம். ஒரு கிலோ குண்டு மல்லி ரூ.700 முதல் 500 வரை விலை போகும். குண்டு மல்லி ஒரு ஏக்கர் பயிரிட்டால் ரூ.2 லட்சம் வரை விருமானம் கிடைக்கும் என கூறினார்.

தினகரன்

**பெர்சிமென் பழ சீசன் துவக்கம்**

குன்னூர்,: நீலகிரி மாவட்டம் குன்னூர் தோட்டக்கலை துறைக்கு சொந்தமான பழப்பண்ணையில் பல்வேறு வகையிலான பழ மரங்கள் உள்ளன. இதில் சீசனுக்கு ஏற்றார் போல் விளையும் பழங்களை சுற்றுலா பயணிகளுக்கு விற்பனை செய்வதுடன் இதன் மூலம் ஜாம், ஜெல்லி உள்ளிட்ட பழ ரசங்களும் இயற்கையான முறையில் தயாரிக்கப்பட்டு சுற்றுலா தலங்களில் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தோட்டக்கலை துறையினருக்கும் கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது. இந்நிலையில் தற்போது ஜப்பான் நாட்டு தேசிய பழமான பெர்சிமென் பழ சீசன் துவங்கி உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சி காலத்தின் போது இப்பண்ணையில் 140 மரங்கள் நடவு செய்யப்பட்டது. இதில் தற்போது 90 மரங்கள் மட்டுமே உள்ளன. இந்த மரத்தில் ஆண்டுதோறும் மே இறுதி முதல் ஜூலை இறுதி வரை சீசன் காலமாகும். தற்போது, பெர்சிமென் பழங்கள் அதிகளவில் காய்த்துள்ளது. ஆரெஞ்சு பழ வடிவில் தக்காளி போல் காட்சி அளிக்கும் இப்பழத்தில் விட்டமின் சத்துக்கள் அதிகளவில் உள்ளது. இருதய நோய் சம்மதமான நோய்களுக்கு இப்பழம் ஏற்றது. இப்பழம் தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்திலுள்ள குன்னூர் சிம்ஸ்பூங்காவிலுள்ள பழப்பண்ணையில் மட்டுமே பயிரிடப்பட்டு வருகிறது.

இந்தியாவில் அழிந்து வரும் பழ வகைகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இப்பழத்தை பறித்து எத்தனால் திரவத்தில் போட்டு

நன்கு ஊற வைத்த பின்னர் 2 நாள் கழித்து அதனை சுத்தம் செய்து சாப்பிட வேண்டும். மருத்துவகுணமுள்ள இந்த பழத்திற்கு சுற்றுலா பயணிகள் மத்தயில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. ஒரு கிலோ பெர்சிமென் பழம் ரூ.100வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனை உள்ளூர்வாசிகள் மட்டுமல்லாமல் சுற்றுலா பயணிகளும் அதிகளவில் ஆர்வத்துடன் வாங்கி செல்வது குறிப்பிடத்தக்கது.

**ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் தேங்காய் வரத்து அதிகரிப்பால் விலை சரிந்தது**

கோவை, : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தைக்கு நேற்று ஒரே நாளில் 16.7 டன் தேங்காய் விற்பனைக்கு வந்தது. இதனால் தேங்காய் விலை கடந்த வாரத்தை விட ரூ.4 குறைந்து, ரூ.18க்கு விற்பனையானது.கோவை. ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் நேற்று வழக்கத்தை விட பொதுமக்கள் அதிகளவில் வந்ததால் 12 மணி வரை வியாபாரம் நடந்தது. மொத்தம் 12 ஆயிரம் பேர் காய்கறிகளை வாங்கினர். இதில் 118 டன் காய்கறிகள் ரூ.28 லட்சத்திற்கு விற்பனையானதுநேற்று நடந்த விற்பனையில் தேங்காய் 16.7 டன்னும், தக்காளி 14 டன்னும், வெங்காயம் 10.3 டன்னும் உருளைக்கிழங்கு 9.6 டன்னும், வாழைப்பழம் 4.3 டன்னும், வாழைக்காய் 4.3 டன்னும் என 59.2 டன் விற்பனையானது. இது தவிர மற்ற காய்கறிகள் 59 டன் விற்பனையானது.

கடந்த வாரத்தை விட தேங்காய் ரூ.22ல் இருந்து ரூ.18 ஆக விலை குறைந்துள்ளது. அவரைக்காய் ரூ.37ல் இருந்து ரூ.24க்கும், சின்னவெங்காயம் ரூ.60ல் இருந்து ரூ.48க்கும், முருங்கைக்காய் ரூ.80ல் இருந்து ரூ.50க்கும், இஞ்சி ரூ.100ல் இருந்து ரூ.90க்கும், சேனைக்கிழங்கு ரூ.55ல் இருந்து ரூ.45க்கும் குறைந்துள்ளது.தேங்காய் வரத்து அதிகரிப்பு : தேங்காய் கடந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை 15.3 டன் விற்பனைக்கு வந்தது. ரூ.6 முதல் ரூ.22 வரை விற்றது. நேற்று 16.7 டன் வந்துள்ளது.

வரத்து அதிகரிப்பால் விலை நேற்று சரிந்தது. ரூ.5 முதல் ரூ.18 வரை விற்றது.

தமிழகம் முழுவதும் வறட்சி இயற்கை பேரிடராக அறிவிக்க விவசாயிகள் சங்கம் கோரிக்கை




வேலூர்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் உழவர் தின பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நேற்று வேலூரில் நடந்தது. வேலூர் டவுன் ரயில் நிலையம் அருகில் தொடங்கிய பேரணி கோட்டை மைதானத்தை அடைந்தது. அங்கு நடந்த கூட்டத்துக்கு சங்க மாநில தலைவர் சிவசாமி தலைமை தாங்கினார். கூட்டத்ததில் வேலூர் உட்பட 9 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும். வறட்சியால் ஏற்படும் பதிப்புகளையும் இயற்கை பேரிடராக அறிவித்து நிவாரண உதவிகளை அளிக்க வேண்டும். தேசிய வங்கி மற்றும் கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய பயிர் கடன்களை ரத்து செய்ய வேண்டும். மாவட்டத்தின் முக்கிய நகரங்களில் பால் குளிரூட்டும் மையங்களை ஏற்படுத்தி பால் உற்பதியாளர்களை அரசு பாதுகாக்க வேண்டும். கரும்புக்கு ரூ.4 ஆயிரம், நெல் குவிண்டாலுக்கு ரூ.2 ஆயிரம் வழங்க வேண்டும். நெடுஞ்சாலை விரிவாக்கம் என்ற பெயரில் விவசாய நிலங்களை ஆக்கிரமிப்பு

செய்வதை கைவிட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சென்னையில் 106 டிகிரி வெயில்...**




சென்னை: சென்னையில் நேற்று 106 டிகிரி வெயில் கொளுத்தியது. மதிய வேளையில் அனல்காற்றும் வீசியதால் வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். சென்னையில் கடந்த வாரம் வரை 102 டிகிரி என்ற அளவில் வெயில் நீடித்தது. தற்போது அது அதிகரித்துள்ளது. நேற்று சென்னையில் 106 டிகிரி அளவுக்கு வெயில் கொளுத்தியது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்று மதியம் வெப்ப காற்று வீசியது. இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர். வெப்ப காற்று வீசியதால் உடலில் எரிச்சல் காணப்பட்டதால் பொதுமக்கள் நேற்று மதியம் வெளியில் வருவதை தவிர்த்தனர். இதையடுத்து, வெப்ப சலனம் காரணமாக இரண்டு நாட்களுக்கு 105 டிகிரி அளவுக்கு வெயில் கொளுத்தும். தொடர்ந்து வெப்ப சலனம் நீடிக்கும்பட்சத்தில் திடீர் மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

60 வயது விவசாயிகளுக்கு ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் ஏரி, ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தல்

திருச்சி, : 60 வயதடைந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று தமிழக ஏாி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. தமிழக ஏா ி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம் மாநிலத் தலைவர் விசுவநாதன் தலைமையில் நேற்று நடந்தது. மண்ணச்சநல்லூர் ஒன்றிய தலைவர் சுப்ரமணியன் வரவேற்றார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவது: 1970, 1972 ஆகிய ஆண்டுகளில் இலவச மின்சாரம், விவசாயத்திற்கு தனி பட்ஜெட் அறிவிக்கப்பட வேண்டும் உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி நடத்தப்பட்ட போராட்டத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு விவசாயிகள் 52 பேர் உயிரிழந்தனர், பலர் படுகாயமடைந்தனர், பலர் சிறை சென்றனர். அதனை நினைவு கூறும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 5ம் தேதியை விவசாயிகள் உழவர் தினமாக அறிவித்து உயிர்நீத்த விவசாயிகளுக்கு அஞ்சலி செலுத்த வேண்டும். 60 வயதடைந்த விவசாயிகளுக்கு மாதம் ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் அளிக்க வேண்டும். துப்பாக்கி சூட்டில் பலியான பாதிக்கப்பட்ட 52 பேர் குடும்பத்தினா ில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும். அவர்களை தியாகி பட்டியலில் சேர்த்து இறந்தவர்களின் மனைவிகளுக்கு தியாகி பென்ஷனை வழங்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய பொருட்களுக்கு உற்பத்தி செலவை விட கூடுதலாக 50 சதவீதம் சேர்த்து கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்ற எம்.எஸ்.சுவாமிநாதன் கமிட்டியின் கோரிக்கையை ஏற்று பா ிந்துரை செய்ய மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ரயில்வே துறையை போல விவசாய துறைக்கும் தனிப் பட்ஜெட் கொண்டு வர வேண்டும். விவசாயிகளுக்கு 100 சதவீத இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோா ிக்கைகள் தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. முன்னதாக துப்பாக்கில் சூட்டில் உயிர் நீத்த 52 விவசாயிகளுக்கு

மெழுகுவர்த்தி ஏந்தி மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில் பல்வேறு மாவட்டத்திலிருந்து நிர்வாகிகள் பங்கேற்றனர். திருவெறும்பூர் ஒன்றியத் தலைவர் பூலாங்குடி தங்கராசு நன்றி கூறினார்.

மாநில, தேசிய அளவில் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம் நடத்த வேண்டும்

ஈரோடு, : தமிழ்நாடு விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ஈரோட்டில் ஆலோசனை கூட்டம் நடந்தது. கூட்டமைப்பின் செயலாளர் நல்லசாமி தலைமை தாங்கினார். கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தமிழ்நாடு சட்டபேரவையின் நடப்பாண்டு பட்ஜெட் கூட்டத்தொடர் 4 நாட்கள் மட்டுமே நடந்தது. துறைவாரியான மானிய கோரிக்கைகள் விவாதிக்கப்படவில்லை. எனவே தமிழக சட்டபேரவையை உடனடியாக கூட்ட வேண்டும், தமிழகத்தில் மாவட்ட அளவில் மாதந்தோறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. மாநில அளவிலும், தேசிய அளவிலும் விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டத்தை நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், ரேசன் கடைகள் மூலமாக மானிய விலையில் கருப்பட்டி, கம்பு, ராகி, சோளம், தினை, வரகு, சாமை, குதிரைவாலி ஆகிய உணவு பொருட்களை விநியோகம் செய்ய வேண்டும். தமிழகத்தில் மதுவிலக்கு கொண்டுவரும் வரை டாஸ்மாக் விற்பனை மதுக்கள் அனைத்தும் பனை, தென்னை பொருட்களை மூலப்பொருளாக கொண்டு தயாரிக்க வேண்டும், கள்ளுக்கான தடையை நீக்கும் பொருட்டு 31.5.2009 அன்று நீதிபதி சிவசுப்பிரமணியம் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்த குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கள்ளுக்கு தடை விதிக்க கூடாது என்பன உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் தமிழ்நாடு கள் இயக்க மாநில அமைப்பாளர்கள் கதிரேசன், சிப்பி முத்துரத்தினம், தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் ராமசாமி, இந்தி யமக்கள் இயக்க அமைப்பாளாகள் கோபிநாத், தங்கராசு, கோவிந்தராஜ்,

பழனிவேல், ராஜ்மோகன், ராதாகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**பாபநாசத்தில் குவிண்டால் பருத்தி ரூ.4192க்கு ஏலம்**

பாபநாசம், : பாபநாசம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நடந்த பருத்தி ஏலத்தில் குவிண்டால் பருத்தி ரூ.4192க்கு ஏலம் போனது. தஞ்சை மாவட்டம் பாபநாசம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் மதகரம், அன்னுக்குடி, கோடு கிழி, பாபநாசம், திருவேதிக்குடி, திருவையாத்துக்குடி, திருக்களஞ்சேரி, மாலாபுரம், மேலச் செம்மங்குடி, கோட்டைச் சேரி, அகராத்தூர், வல்லம், இரும்புத் தலை, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 981 விவசாயிகள் கலந்து கொண்டனர். கும்பகோணம், செம்பனார் கோயில், சத்திய மங்கலம், விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 8 வியாபாரிகள் கலந்து கொண்டனர். 59. 83 லட்சம் மதிப்புள்ள 1481. 26 குவிண்டால் பருத்தி ஏலம் விடப்பட்டது. இதில் அதிகபட்சமாக ஒரு குவிண்டால் ரூ. 4192 க்கும், சராசரியாக ரூ.4028 க்கும் ஏலம் போனது. வெளி மார்க்கெட்டில் குவிண்டால் ரூ.3,500 விற்கும் நிலையில் இங்கு அதிக விலை கிடைத்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.